219

உ

கடவுள் துணை.

# செந்தமிழ்.

தொகுதி-அ.] சௌமிய-ஹூ பங்குனி மீ. [பகுதி-ரு.

## கரவைவேலன் கோவை.

### உபநியாசம்.

இக்கோவை, யாழ்ப்பாணத்து நல்லூரிலே ஏறக்குறைய நூற்றைம்பது வருடத்துக்கு முன்னிருந்த சின்னத்தம்பிப்புலவர் என்பவர் செய்தது. மறைசைத்திரிபந்தாதி, கல்வளையமகவந்தாதி, பருளாய்ப்பள்ளு முதலிய பிரபந்தங்கள் செய்தவரும் இந்தச் சின்னத்தம்பிப்புலவரேயாவர். கரவைவேலன்கோவை என்பது யாழ்ப்பாணத்திற் கரவெட்டி என்னும் இடத்திலே பெருஞ்செல்வரும் பெருங்கொடையாளருமாய்அப்பொழுதுவாழ்ந்தவேலாயுதப்பிள்ளை என்னும் பிரபுவைப் பாட்டுடைத்தலைவராகக் கொண்டு அகப்பொருளின் துறைவகையமைத்துக் கட்டளைக்கலித்துறையிற் செய்த காரணம்பற்றி வந்தபெயர். அவர் தக்கோர் பலர்முன்னிலையில் இக்கோவையைக் கேட்டுக் கவிக்கொரு பொன் கொடுத்தார் என்பது கர்ணபரம்பரை.

மறைசைத்திரிபந்தாதியும், கல்வளையமகவந்தாதியும் யாவரானும் நயந்தும் வியந்தும் பேணிப்படிக்கப்பட்டு யாண்டும் பரந்து வருகின்றன. அச்சிலும் ஏறின. இக்கோவையோ தேடிப்படிப்பாரும், நாடிக்கேட்பாரும், பாதுகாத் தெழுதிவைப்பாருமின்மையாற் பழுதடைந்து தமிழ்நாட்டிற்பரந்து நிலைபெறுதல் செல்லாதாயிற்று. இக்கோவைப் பெயரைத்தானும் ஈண்டு வழங்கக்கேட்டல் அரிது. பின் கவிகள் வழங்கக் காண்பது எங்கே! ஆயினும், அவர் வழித்தோன்றலாகிய ஸ்ரீ சிதம்பரநாதப்பிள்ளை என்பவர்

யாதோ ஒரு பிரதி கிடைக்கப்பெற்றுத் தாமெழுதிக்கொண்ட கவிகள் என்று சிலபல கவிகள் அனுப்பிவைத்தனர். பழுதின்றி முழுதுமமைந்த பிரதிகள் அகப்படுமாயின்; அச்சிடுவித்து வெளிப்படுத்திவிடுவதும் அவர் கருத்து. பிரதிகள் வைத்திருப்பவர்கள் அவர் கருத்துக்குத் துணைபுரிதல் ஆவசியகம் என்பது எமது கருத்து. சில கவிகள் வெளிப்படுமாயின் ; பிரதிகளினிருக்கையையும், தாரதம்மியங்களையும் வெளிப்படுத்திவிடுதலுங் கூடும். ஆதலின் இடையிடை சிலகவிகளை வெளிப்படுத்துதும்.

தற்கால மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் அக்கிராசனாதிபதியும், அருங்கலை விநோதரும், பழந்தமிழ்நூற் பரிபாலகரும், செழுந்தமிழ்க்கவி யருமை அறியுஞ் சீமானும் நமது நண்பிற்சிறந்த பிரபுகுல சிகாமணியுமாகிய ஸ்ரீமாந் - பாண்டித்துரைத்தேவரவர்களும் மற்றைச் சங்கப்புலவர்களும் இந்தச் செந்தமிழ்ப் பத்திரிகையிலே அடிக்கடி வெளிப்படுத்திவரும் பழந்தமிழ்ப் பிரபந்தங்களோடும், பழந்தனிக் கவிகளோடும் இக்கவிகளையும் ஒன்றாகவைத்து நன்கு நோக்கி இனிமையுடையனவாயின் ; அவற்றிற்போல இவற்றிலும் விநோதமுறுக. இனிக் கவிகளிற் செல்லுதும்.

## ஐயம்.

ஐயமாவது ஈண்டுக் காணப்பட்ட இம்மாது மாநுட மகளோ? மலையரமகளோ ? என்பன முதலியனவாகத் தலைவன் மனத்துக்கட்டோன்றும் பலதலையாய உணர்வு.

### செய்யுள்.

க. கங்கா தரன்சிலை யோரத மோகவி னும்பணியோ
வெங்காள போசன சாலைய தோவியன் முத்தமிழும்
மங்காமல் வந்த காவையில் வேலன் வரையிலிசை
சிங்கார வல்லியர் வாழ்பதி யாதெனத் தேர்கிலமே.

கங்காதரன்சிலை - மேருமலை. (கங்காதரன்) இரதம் - பூமி, (கங்காதரன்) வெங்காள போசனசாலை - பாற்கடல். கங்காதரன் - சிவன். சிலை - வில்லு. பணி - அணி. காளம் - நஞ்சு. இசை - இசைந்த. சிங்காரம் - புணர்ச்சி, ஆபரணம்.

கங்காதரன் சிலேயோ என்பதனுல் மலையரமகளோ? என்றும், இரதமோ என்பதனுல், மாநுடமகளோ என்றும், பணியோ என்பதனுல் நாகருலகுறைமகளோ? என்றும் காளபோசனசாலையதோ என்பதனுல் நீரரமகளோ? என்றும், ஒன்றின் இலக்குமியோ? என்றும் கருதி ஐயப்பாடுற்றுன் என்பது தெளியப்படும்.

## துணிவு.

துணிவாவது கண்ணிமைத்து இருநிலம் காலுந்தோய்தல் முதலிய காரணத்தாற் பெண்ணிவள் மாநுடப்பிறப்பினுள் என்று தன்னுள்ளே நிர்ணயஞ் செய்வது.

### செய்யுள்.

உ. பூவென்ற மாலிலங் கேசனை நாளைக்குப் போர்புரிய
வாவென்ற வீரன் கரவையில் வேல மகிபதிமேற்
பாவென்ற வாணிப் பவளச்செவ் வாய்மடப் பாவையிவள்
ஏவென்ற காதள வோடிய பார்வை யிமைக்கின்றதே.

பூ - பூமி. இலங்கேசன் - இராவணன். மகிபதி - அரசன். பா- செய்யுளின்பம், ஆகுபெயர். வாணி - வார்த்தை. ஏ - அம்பு. "இலங்கேசனை நாளைக்குப் போர்புரிய வாவென்ற வீரன்" என்பது, முதலாம் போரிலே இராவணன் நிராயுதனுய் நின்றபோது ஸ்ரீ இராமபிரான் அவன் மேலிரங்கி, "இன்றுபோய்ப் போர்க்கு - நாளைவாவென நல்கினுன்" (முதற்போர்) என்று இராமாயணத்திற் கூறிய கதையைக்காட்டி நின்றது. வீரம் முதலியகாரணம் பற்றிப்பாட்டுடைத்தலைவனைப் புருடோத்தமன் என்று பாடுதல் கவிமரபு.

## முன்னிலையாக்கல்.

முன்னிலையாக்கலாவது தலைவன் தலைவியை முன்னிலையாக்கிக் கூறுதல்.

### செய்யுள்.

௩. பாடாம லோசை யடியாமற் செம்மணிப் பந்துகழங்
காடாம லூசலு மாடாமற் பாங்கிய ராயத்தொடுங்
கூடாம னின்றதென் வெங்கலிமூடிக் குவலயங்கள்
வாடாமல் வந்த கரவையில் வேலன் வரையணங்கே.

அணங்கே! நின்ற தென்? எனமுடிக்க. ஓசை பாடாமல் எனவும், செம்மணிப்பந்து அடியாமல் எனவும் இயையும். ஓசை - இசை. "வெங்கலி மூடிக் குவலயங்கள் வாடாமல் வந்த" என்பதனுல் வறுமை தீரக் கொடுக்கும் வள்ளற்றன்மை கூறப்பட்டது.

## பொய்பாராட்டல்.

பொய் பாராட்டலாவது மெய்தொட்டுத் தலைவியின் குறிப்பினை அறியாநின்ற தலைவன் பொய்யாயின புனைந்துகூறிப் பாராட்டி நிற்றல்.

### செய்யுள்.

ச. சேது நிலையிட்ட மாப்பாண னீன்றருள் செல்வன்கலை
ஓதும் வரிசைக் கரவையில் வேல னுயர்சிலம்பில்
மாது நினது முகத்துக்குத் தோற்று வனசமலர்
போது வனத்துட் சிறையாகிப் பங்கம் பொருந்தியதே.

செல்வன் - குமாரன். வரிசை - முறைமை. "வனத்துட்சிறையாகிப் பங்கம் பொருந்தியதே" என்பது சிலேடை. வனம் - காடு, நீர். சிறை - காவல், தடை. பங்கம் - சேறு, பின்னம்.

## அணிந்துழி நாணியதுணர்ந்து தேளிவித்தல்.

அஃதாவது புணர்ச்சிக்கண் வேறுபாடடைந்த அணிகலங்களைத் திருத்தித் தலைவன் அணிந்தபோது தலைவி நாணம் மீதூர்ந்து நின்ற நிலையை அவனுணர்ந்து தெளிவித்தல்.

### செய்யுள்.

ரு. நகைவாய்த்த சுந்தர சந்த்ரோ தயவட்ட நாணுமுகம்
முகைவாய்த்த பூண்முலை மாணிக்க மேநும் முதுகுலத்தோர்
பகைவாய்த் திடாம லணியணிந் தேனிரு பத்திரண்டாந்
தொகைவாய்த்த வள்ளல் கரவையில் வேலன் சுரும்பகத்தே.

நகை - ஒளி. முகைவாய்த்த - மொட்டினையொத்த. பகைவாய்த்திடாமல் - ஆபரணங்கள் வேறுபாடுற்ற காரணம் என்னை என்று வினவி ஐயப்பாடுற்றுப்பகைகொள்ளாமல். "இருபத்திரண்டாந்தொ

கை வாய்த்த வள்ளல்" என்று முதல், இடை, கடை என்று மதிக்கப் படும் மூவகை வள்ளல்கள் இருபதிற்றொருவரோடும் உடங்குசேர்த்து ஒப்புமைக் கூட்டமாக்கி உரைத்தது அவன் கொடையின் மிகுதிப்பாடு புலப்படுத்தல் கருதி என்க. சுரும்பு - மலை.

## பெருநயப்புரைத்தல்.

பெருநயப்புரைத்தலாவது தலைவிமாட்டுத் தான்கொண்ட விருப்பின் மிகுதிப்பாட்டினைத் தலைவன் புனைந்துரை வகையாற் கூறுதல்.

### செய்யுள்.

சு. துளியாடு நீலப் பயோதரங் காணிழல் மேற்சுழியுங்
களியானை வீரன் கரவையில் வேலன் கனகிரிமான்
அளியார் முகமதி போலிரு சாரங்க மாங்கமரும்
ஒளியார் மதியொன்று கண்டதுண் டாயினுரை மின்களே.

துளியாடல் - துளித்தல். பயோதரம் - மேகம். இருசாரங்கம்- இரண்டுமான் ; என்றது கண்களை.

## பாங்கன் கழறல்.

பாங்கன் கழறலாவது தலைவன் தனக்குற்றதைக் கூறக்கேட்ட பாங்கன் நின்செயலிருந்தவாறு என்னையோ என இடித்துரைத்தல்.

### செய்யுள்.

எ. சங்கந் தவழும் வயல்சூழ் கரவை தழைக்கவந்த
துங்கன் குணகரன் வேல மகீபன் சுரும்பின்மின்னாட்
கங்கம் பொலிவழிந் தேன்மெலிந் தாய்சிறு மானுக்கஞ்சிச்
சிங்கம் புலம்புவ தொப்பாகு மூரிச் சிலையண்ணலே.

குணகரன் -- குணங்களுக்கிடனாயுள்ளோன். சுரும்பு -- மலை. அண்ணலே ! ஏன் மெலிந்தாய்? எனவும், நின்செயல் "சிறுமானுக் கஞ்சிச் சிங்கம் புலம்புவது" ஒப்பாகும் எனவும் முடிக்க.

## எவ்விடத்தெவ்வியபற்றென்றல்.

எவ்விடத்தெவ்வியற்றென்றலாவது பாங்கன் தலைவனைநோக்கி நீ கண்ட உருவம் எவ்விடம் உடையது, எந்த இயலுடையது என்

று வினவிநிற்றல். இடத்து - இடமுடையது; குறிப்பு வினைமுற்று. இயற்று என்பதுமது.

### செய்யுள்.

அ. விடைதாங்கி ஞன்சிலை யோவண்ண லேசிரை மேய்த்துமலைக்
குடைதாங்கி ஞனுந்தி யோவணை யோகொற்ற மேவலரைச்
சடைதாங்க வைத்த காவையில் வேலன் றடஞ்சிலம்பிற்
படைதாங்கும் வேல்விழி யாரிய லேது பகரெனக்கே.

விடைதாங்கினன் சிலையோ என்பதனால் நின்னை வருத்திய மாதினிடம் மலையோ என்றும், மலைக்குடை தாங்கின னுந்தியோ என்பதனால் தாமரைமலரோ என்றும், அணையோ என்பதனால் நாக ருலகோ என்றும் வினவினன் என்பது பெறப்படும். இடம் என் பது வருவிக்கப்பட்டது.

விடைதாங்கினன் -- இடபத்தினாலே சுமக்கப்பட்ட சிவன். சிலை - வில்லு. நிரை - பசு. மலைக்குடைதாங்கினனுந்தி - தாமரைப்பூ. (அவன்) அணை - சர்ப்பம்.

## பாங்கன் தலைவனை வியத்தல்.

### செய்யுள்.

க. சிந்தா மணியன்ன வேலன் காவைச் சிலம்பின்மின்னாள்
தந்தா வளத்துணை பாயவும் பார்வைச் சாந்தைக்கவும்
பைந்தா ரணிமுடிக் கண்ணியிற் பட்டும் படாதவர்போல்
வந்தா ரவர்ப்புக ழின்வேணுஞ் சேடனும் வாணனுமே.

தந்தாவளம் -- யானை. தந்தாவளத்துணை என்றது யானைக் கொம்புபோன்ற இரண்டு தனங்களையும். பார்வைச்சரம் - கண்களாகிய அம்புகள். கண்ணி - வலை. இத்தலைவர் செயலைப்புகழும் படி தொடங்கின் ஆயிரம் நா வேண்டுமென்பார் சேடன் வேண்டும் என்றும், அவ்வகை நாக்களாற் சொல்லும் புகழுரைகளை வரைவு செய்தற்கு ஆயிரம் கரங்கள் வேண்டும் என்றும் கூறினர். இவ்வாறே சேதுபுராணகாரரும் "ஆயிரங்கவை நாவர வஞ்சொல—ஆயிரங் கரவாணன் பொறிக்கினும்" என்றார்.

## புகழ்தல்.

புகழ்தலாவது கலவியின் மகிழ்வு பெற்ற தலைவன் தலைவியைப் புகழ்ந்துரையாடுதல்.

### செய்யுள்.

௧௦. மொழிகண்ட முச்சங்க முத்தமிழ் நூல்கண் முதுமதியால்
வழிகண்ட நீதிக் கரவையில் வேலன் மணிவரைமேற்
சுழிகண்ட வுந்திப் பசுந்தோகை யஞ்சனந் தோயுமிரு
விழிகண்ட பின்னல்ல வோபய மானது வேலையுமே.

மொழிகண்ட - நன்மொழிகளாற் செய்யப்பட்ட. வழிகண்ட - முறையே உணர்ந்த. உந்தி - கொப்பூழ். பயமானது என்பது சிலேடை. அது நீர்மயமாயிற்று எனவும், அச்சமடைந்தது எனவும் பொருள்படும்.

(இவை இடையிடை தெரிந்தெடுத்த கவிகள்.)

அ. குமாரசுவாமிப்பிள்ளை.

---

உ

திருச்சிற்றம்பலம்.

# திருக்குறளாராய்ச்சி.

(முற்றொடர்ச்சி.)

---

௫௫௬. மன்னர்க்கு மன்னுதல் செங்கோன்மை யஃதின்றேன்
மன்னுவா மன்னர்க் கொளி.

இதன் உரையிலே "மன்னர்க்குமன்னுதல்செங்கோன்மை" என்பதற்கு "அரசர்க்குப் புகழ்கடாம்நிலைபெறுதல் செங்கோன்மையானும்" என்றச்சிடப்பட்டிருக்கிறது. சில ஏடுகளில் இதற்கு "அரசர்க்குப் புகழ்களானிலைபெறுதல் செங்கோன்மையானும்" என்பது உரையாகக் காணப்படுகிறது.

இவ்விரண்டினுள் ஆசிரியர் பரிமேலழகர்கொண்ட பாடம் யாதென்பது ஆராயத்தக்கதாம். அவ்வாறாராயுமிடத்து,—விசேடவுரையில் "மன்னுதற்கேது புகழாதல் 'இந்நிலத்துமன்னுதல் வேண்டினிசைநடுக' என்பதனானுமறிக." என்றொருவாக்கியம் எல்லா அச்சுப்பிரதிகளிலும் ஏட்டுப்பிரதிகளிலுங் காணப்படுகிறது. அதனால் அவ்வாக்கியம் ஆசிரியர் பரிமேலழகர் கூறியதென்றே கொள்ளவேண்டும். அவ்வாக்கியத்துள் "மன்னுதற்கேதுபுகழாதல்" என்றதனால் (அரசன்) நிலைபெறுதற்குப் புகழ் காரணமென்றாராம். அச்சுப்பாடமாகிய "அரசர்க்குப்புகழ்கடாம் நிலைபெறுதல் செங்கோன்மையானும்" என்பதனாலே, அரசன் நிலைபெறுதற்குப் புகழ்காரணமென்பது புலப்படாமையால், அஃது ஆசிரியர் பாடமன்றாம். அஃதவர் பாடமெனின் "மன்னுதற்கேதுபுகழாதல்" என்னும் விசேடவுரைவாக்கியங் கூறார். ஆகவே ஆசிரியர் கொண்டது அச்சுப்பாடமன்றென்பது போதரும்.

இனி, ஏட்டுப்பாடம் ஆசிரியர் கொண்டதெனின்,—"அரசர்க்குப் புகழ்களால் நிலைபெறுதல் செங்கோன்மையானும்; அச்செங்கோன்மை யில்லையாயின் அவர்க்கு அப்புகழ்கள்தாம் உளவாகா" என்பது இக்குறளின் பொருளாய் "செங்கோன்மையாலே புகழ்நிலைபெறும்; புகழால் அரசன் நிலைபெறுவான்" என்பதும், "கொடுங்கோன்மை யுடையானுக்குப் புகழில்லை; புகழில்லையேல் அவனும் நிலைபெறான்" என்பதும் கருத்தாகிச் செவ்வனேயமைவுபெறும். பெறவே "அரசன் நிலைபெறுதற்குப் புகழ்காரணம், புகழ்நிலைபெறுதற்குச் செங்கோல் காரணம் ஆதலால் அரசன் நிலைபெறுதற்குச்செங்கோல் பரம்பராகாரணம்." என்பது சித்திக்கும். அன்றியும் "மன்னுதற்கேதுபுகழாதல் 'இந்நிலத்துமன்னுதல் வேண்டினிசைநடுக' என்பதனானுமறிக" என்னும் விசேடவுரைவாக்கியத்துள் "மன்னுதற்கேது புகழாதல்" என மூன்றுவதன் ஏதுப்பொருண்மையை ஆசிரியர் பரிமேலழகரே விளக்கியிருத்தலான், அதற்கேற்பவுரையிலும் "புகழ்களால் நிலைபெறுதல்" என மூன்றுவது விரித்துக்கூறுவதே அவர்கருத்தாம். மனிதர் நிலைபெறுதற்குப் புகழே ஸாக்ஷாத்காரணம் என்பதனை "கலைமகள்வாழ்க்கைமுகத்ததெனினும், மலரவன்வண்டமிழோர்க் கொவ்வான்—மலரவன்செய், வெற்றுடம்பு மாய்வனபோன்மாயா

புகழ்கொண்டு, மற்றிவர் செய்யும் உடம்பு.'' என்னுஞ்செய்யுளால் நீதிநெறிவிளக்கநூலாரும் விளக்கியிருக்கின்றார்.

ஆகவே, மேலேகாட்டிய காரணங்களெல்லாவற்றாலும் "அரசர்க்குப் புகழ்களானிலைபெறுதல் செங்கோன்மையானும்'' என்னும் ஏட்டுப்பாடமே ஆசிரியர் பாடமென்பதும், அதனால் அவ்வேட்டுப் பாடமே கொள்ளத்தக்கதென்பதும் தெற்றென விளங்கும்.

கO அகூ. கொடும்புருவங் கோடா மறைப்பி னடுங்கஞர்
செய்யல மன்னிவள் கண்.

இதன் விசேடவுரையில் "நட்டாரைக் கழறுவார்க்குத் தாஞ் செம்மையுடையராதல் வேண்டலிற் கோடாவென்றும், செய்கின்ற அவற்றிற்கும் உறுகின்றதனக்கும் இடைநின்று விலக்குங்காலுஞ் சிறிதிடைபெறின் அதுவழியாக வந்து அஞர் செய்யுமாகலின் மறைப்பினென்றுங் கூறினார்.'' என்றச்சுப்பிரதிகளிலுள்ள வாக்கியத்தின் ஈற்றிலுள்ள "கூறினார்'' என்பது "கூறினான்'' என்று சிலஏடுகளிற் காணப்படுகிறது. இவ்வாக்கியத்துள் "செய்கின்ற அவற்றிற்கும் உறுகின்றதனக்கும்''எனத்தலைவனைச் சுட்டியிருத்தலின் (அவன்) "கூறினான்.'' என்று முடிப்பதே பொருத்தமுடைத்தாம். மேல், கOஅஎ-ம் குறளின் விசேடவுரையிலும் பிறாண்டும் இவ்வாறே தலைவன் கூற்றாகக் கூறியிருத்தல் காண்க.

கOகூ. உறாஅ தவர்போற் சொலினுஞ் செறாஅர் சொ
லொல்லை யுணரப்படும்.

இதன் விசேடவுரையில் "தன்குறைமுடிக்கக் கருதியே சேட்படுகின்றமை குறிப்பானறிந்து உலகியன்மேலிட்டுக் கூறியவாறு.'' என்றச்சிடப்பட்டுள்ள வாக்கியத்திலுள்ள "சேட்படுகின்றமை''என்பது சில ஏடுகளில் "சேட்படுக்கின்றமை'' என்று காணப்படுகிறது. இக்குறளுரையின் அவதாரிகையில் "தோழி சேட்படுத்தவழி அவள் குறிப்பறிந்த தலைமகன் தன்னுள்ளே சொல்லியது'' என்றிருத்தலின் அதற்கேற்ப விசேடவுரையிலும் "தன்குறைமுடிக்கக்கருதியேசேட்படுக்கின்றமை குறிப்பானறிந்து உலகியன்மேலிட்டுக் கூறியவாறு.'' என்பதே சிறப்புடைத்தாம்.

*

ககஙு௨. இன்கணுடைத்தவர் பார்வல்பிரிவஞ்சும்
புன்கணுடைத்தாற் புணர்வு.

இதன் விசேடவுரையில் "புன்கண்என்னுங்காரியப்பெயர் காரணத்தின் மேல்தாயிற்று." என்றொருவாக்கியம் அச்சுப்பிரதிகளிலெல்லாங் காணப்படுகின்றது. இவ்வாக்கியம் சில ஏடுகளில் "புன்கணென்னுங் காரணப்பெயர் காரியத்தின் மேலாயிற்று" என்று காணப்படுகிறது.

இவ்விரண்டு பாடத்துள்ளுங் கொள்ளத்தக்கது யாதென்றுராய்வோம்:—"புன்கணென்னுங் காரியப்பெயர் காரணத்தின்மேலதாயிற்று" எனின், துன்பத்திற்கு அச்சங் காரணமாகவேண்டும். ஈண்டுத்தலைமகன் பிரியாதிருக்கவும், அவன்பிரிய எண்ணியிருத்தலை அவன் குறிப்பினலறிந்த தலைமகள், பிரிவினாலுண்டாகுந் துன்பத்தை நினைந்து அச்சமுற்றுளாகலின் அச்சத்திற்குத் துன்பங்காரணமாயிற்றேயன்றித் துன்பத்திற்கு அச்சங்காரணமாகவில்லை. அதனுல் அது (அச்சுப்பாடம்) பொருந்தாதாம். இனி,

"புன்கணென்னுங் காரணப்பெயர் காரியத்தின் மேலாயிற்று" எனின், அச்சத்திற்குத் துன்பங்காரணமாகும். மேலேசொல்லியவண்ணம் தலைமகள், தலைமகன் குறிப்பினுலே அவன்பிரிய எண்ணியிருத்தலை யறிந்தாள்; அறிந்தவுடன் பிரிவினாலுண்டாகுந் துன்பந் தோன்றிற்று; அது தோன்றினவுடன் அச்சமுண்டாயிற்று. எனவே துன்பத்தோற்றம் அச்சத்திற்குக் காரணமாயிற்று. ஆதலால் இப்பாடம் பொருத்தமுடைத்தாம்.

இவற்றால் "புன்கணென்னுங் காரணப்பெயர் காரியத்தின் மேலாயிற்று" என்னும் ஏட்டுப்பாடமே கொள்ளத்தக்கதென்பது போதரும்.

ககஎ௦. உள்ளம்போன் றுள்வழிச் செல்கிற்பின் வெள்ளநீர்
நீந்தல மன்னேவென் கண்.

இக்குறளிலுள்ள "செல்கிற்பின்"என்பது அச்சுப்பிரதிகளிலே "சேல்கற்பின்" என்றே காணப்படுகிறது. இதுவும் நான்முன், செங்

தமிழ் எ-ந் தொகுதி கக-ம் பகுதி ருருசு-ம் பக்கத்திற்காட்டிய குறள் எ௮௦. "புரந்தார்கண்ணீர்மல்கச் சாகிற்பிற்சாக்கா, டிரந்துகோட் டக்கதுடைத்து." குறள்-கக௦. "எதிலார்குற்றம்போற் றங்குற்றங் காண்கிற்பிற், றீதுண்டோமன் னுமுயிர்க்கு." என்பவற்றையும் "அறிந்தாற்றிச் செய்கிற்பாற்கல்லால் வினைதான், சிறந்தானென்றேவற் பாற்றன்று." என்னும் ருகரு-ம் குறளினையும் ஒத்ததாகலின், ஏட்டுப்பாடமாகிய "உள்ளம்போன்றுள்வழிச் செல்கிற்பின்" என்பதே கொள்ளத்தக்கதாம். ஆகவே இப்பாடம்பற்றி இதன் உரையிலும் விசேடவுரையிலும் அச்சிடப்பட்டுள்ள "செல்கற்பின்" என்பவற்றையும் "செல்கிற்பின்" என்றே திருத்திக்கொள்ளல்வேண்டும்.

(இன்னும் வரும்.)

# பிழை திருத்தம்.

## திருக்குறளாராய்ச்சி

செந்தமிழ், தொகுதி-அ. பகுதி-க, ந.

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| சகூ | கூ | பறவுரைத்தார் | வுரைத்தார் |
| ஷ | உரு | வுறைத்தார் | வுரைத்தார் |
| ரு௦ | கச | யாய் | யாய |
| ருக | ச | னென்றதானுற் | னென்றதனுற் |
| ருரு | உரு | சேராவிடல் | சோரவிடல் |
| கருரு | க௦ | சுற்றிநின்று | சுட்டிநின்று |
| கருரு | உ௦ | மரஙகளன்ன | மரங்களென்ன |

அ. கோபாலையன்.

230

உ

# சிறுவர்க்குரிய உபந்நியாசங்கள்.

(முற்றொடர்ச்சி.)

## 3. இன்னா செய்யாமை.

துன்பமுறுபவரிடத்து நாம் இரக்கங் காட்டுவதுடன், நம்மால் எவ்வுயிரும் துன்புறுவண்ணம் பார்க்கமுயலுதல் நமது தவறாக் கடப்பாடாகும்.

அஹிம்ஸா: பரமோதர்ம: (கீதை.)

ஸ்ரீ கிருஷ்ணபரமாத்மாவும் பிறவுயிர்களுக்கு ஹிம்ஸை செய்யாதிருத்தலே உத்தமோத்தமமான பரம தர்மமென்று திருவாய் மலர்ந்தருளியிருக்கின்றார். அஹிம்ஸை என்பதினாலுண்டாகும் அர்த்தமென்ன? நம்மாற் கூடுமான வரையில் பிறவுயிர்களை ஹிம்ஸிக்காதிருக்க முயலுதலென்பதேயாம். இளஞ்சிறுவர்கள் பிராணிகளையும் தம்மோடொத்த சிறுவர்களையும் அடிக்கடி துன்புறுத்துகின்றார்கள். இஃதேனெனில், தாம்செய்வது இன்னதென்பதைச் சற்றுநின்று, அவர்கள் யோசிக்கிறதில்லை. இப்படியே தாம் செய்வது இன்னதென்பது கருதாமல், அவர்கள் பிறவுயிர்க்குத் தீங்கு புரிகிறார்கள். வலிமையுடைய சிறுவனொருவன், அங்ஙனம் வலியில்லாத இளையோனைத் தன் புயவன்மைகொண்டு துன்புறுத்தல் அடாததேயாம். ஜீவப்பிராணிகள் தமக்கு நாம் செய்கிற இன்ப துன்பங்களை யுணர்ந்து நமக்குச்சொல்லும் சக்திபடைத்திருக்கவில்லை யாதலின்; நாம் எல்லாப் பிராணிகளிடத்தும் தயைகாட்ட வேண்டியதும் அவசியமாகும். எளிய நாய், பூனைபோன்ற பிராணிகள் நம்மருகே யிருந்தால், அவை நம்மைவிட்டு விலகுமாறு அவற்றை யுதைத்துத் தொந்தரை செய்தல் கூடாது. குதிரை தன்னாற் கூடியவளவு பாரமான சுமையைத் தாங்கிப்போம்போது நாம்

அதனை அடித்துத் தொந்தரைசெய்தலும், செய்யத்தகாத காரிய மாகும்.

கடவுளின் படைப்புப் பொருள்களாகிய எல்லாப் பிராணிகளிடத்தும் பக்ஷமாய் நடந்து, அவை நம்மைப்போலவே துன்பங்களை யுணருகின்றனவென்பதையும் நம்மனத்திற் பதிக்கவேண்டும். சிலவேளைகளில் எங்கும் தப்பியோடிவிடாதபடி கழுதையையோ ஒரு குதிரையையோ அவற்றின் இரண்டுஅல்லது மூன்று கால்களையும் கயிறுகொண்டு இறுக்கிக் கட்டிவிடுகின்றார்கள். முன்னங்கால்களில் இரண்டினைத் தளர்த்திக்கட்டினால் அதனால் அந்தப்பிராணிகள் வருந்தா.

ஆனால், இக்கால்கள் இறுகப்பிணிக்கப்பட்டபொழுதும், அல்லது முன்னங்கால்களோடு பின்னங்காலொன்றும் சேர்த்திறுக்கப்பட்டபொழுதும் அவ்வேழைப்பிராணி மிக்கதொந்தரைக்குள்ளாகி, அமைதியின்றிக் கஷ்டப்படப்பார்ப்பதற்கு கொடுமையாகவே தோன்றும். எவராவதொருவர் உங்களை அடித்தாலல்லது கிள்ளினால், நீங்கள் வருத்தமுறுகிறீர்கள். ஏன் அங்ஙனம் நீங்கள் வருத்தமுறுதல் வேண்டும்? ஏனெனில், உங்களுடையதேகத்தில் மெல்லிய நரம்புகளிருக்கின்றன; இம்மெல்லிய நரம்புகள் அடிபட்டபொழுது அல்லது வருத்தப்பட்டபொழுது, அவைகள் உணர்ச்சிமிகுந்த பாகமாகிய மூளைக்குச் செய்தியை யறிவிக்கின்றன. நம் மூளை இத்தொந்தரையை ஸஹியாது, எனக்கு வருத்தமாயிருக்கிறதென்று நாமே கூறுகிறோம். எல்லாப்பிராணிகளுக்கும்; இத்தகைய மெல்லிய நரம்புகளிருக்கின்றமையால் அவை பேசக்கூடுமானால் தாமும் வருத்தமுறுகின்றனவெனலாம். ஆதலின், நாம்பிராணிகளை அடித்தலாவது, அவற்றின்மேற் கல்லெறிதலாவது, அவற்றை உதைத்தலாவது, அல்லது எவ்விதமாயினும், அவற்றைத்துன்புறுத்தலாவது, செய்யக்கூடாது. நமக்கு வேண்டியபடி அவற்றை யுபயோகித்தலுடன், அவற்றைப் பக்ஷமாய்நடத்தலும் இன்றியமையாதது.

## 4. துளாதாராவும் ஜாஜலியும்.

இப்பொழுது இன்னா செய்யாமையைப்பற்றி உங்களுக்கு மற்றோர் கதைகூறுகிறேன்.

ஒரு காலத்தில் ஜாஜலி என்னும் பெயரிய பிராமணன் ஒருவனிருந்தான். இவ்விப்ரன் அல்ப ஆகாரமருந்தியும் கந்தைகளையுந் தோல்களையுமன்றி வேறொன்றையும் தன்னுடையாக உடுத்துக்கொள்ளாமல் ஒரு காட்டில் வசித்துவந்தான். இம்மாதிரியாகப் பலவாண்டுகள் ஆங்குக்கழித்துப் பெருந்தவங்கள் பலவற்றையுமிழைத்தான். ஆனால் தான்செய்துள்ள தவப்பெருமையினாலும் பிறவற்றினாலுமிகக் கர்வங்கொண்டு தன்னிலுமிக்கார் இப்பூமண்டலத்தில் எவருமிலரென்று இறுமாப்படைந்தான். ஒருநாள் நான் மிகக்கீர்த்தியடைந்தேன், இவ்வவனியிலுள்ள, சராசர ஜீவப்பொருள்களில் என்னிலு மிக்காராவது, எனக்கு ஸமானமுள்ளவராவது இவ்வுலகில் உளரோ? இல்லைவேயில்லையென்று சொல்லிக்கொண்டு கர்விப்பானானன். இப்படியிவன் எண்ணமிட்டதுதான் தாமசம்.

இம்மாதிரியான வார்த்தைகளை மொழிதல்தவிர, நாள்முழுவதும் பண்டங்கள் வாங்குவதும் விற்பதுமான தொழிலையுடையோனும், உன்னிலுமனேகாயிரமடங்கு நல்நடத்தையிலும், ஞானத்திலும் மிக்கவனுமான துளாதாரனென்னும் நாமமுடையானொருவனுளனாயினும், நீ கூறியமாதிரியான வார்த்தைகள்பகர அவனே தகுதியல்லனெனின் நீ கூறல்தகுமோ என்று ஆகாயத்தில் அசரீரி யொன்று கணீரென்று மொழிந்தது. இவ்வார்த்தையைக் கேட்டலும், ஒருபுறம்கோபமும், மற்றொருபுறம் ஆச்சர்யமுமுற்றவனான அந்தணன், தன்னைக்காட்டிலும் ஸகல விஷயங்களிலும் ஒரு சாதாரண வர்த்தகன் மிக்கானென்று கேட்கப் பொறுதகர்விஷ்டனாய் அன்னோனைப்பற்றி ஆராய்வானாயினா ். ஆதலின் அத்தகைய துளாதாரனைப் போய்க் கண்டுபிடித்து அவன் இத்தன்மையனென அறியலுறவேண்டி வெளிப்புறப்படலாயினான்.

பன்னாட் கழித்து வாராணசி என்னும் சிறந்த க்ஷேத்திரத்தில் அவனைக்கண்டான். கடைத்தெருவில் துளாதாரன் தன்னுடைய வியாபாரத்தைச் செய்துகொண்டிருந்தான், அந்தணனைக்கண்ட மாத்திரத்தில் அவன் உடனே தன்னிருக்கையை விட்டெழுந்து அவனுக்கு விதிப்படி வந்தனங்கள்செய்து தன்னிடத்திற்கு வந்தவரலாறு யாதென்றுவினவினன். ஜாஜலியும் தன்னுடைய எண்

ணத்தின் மேலும், கூறியவார்த்தைகளின் மேலும், ஆகாயத்தின் கண்ணே எழுந்த அசரீரிமொழிந்தவாக்கினை அவனுக்குரைத்தலும், ஞானக்காட்சியினால் அவனுடைய பூர்வஜன்மத்தினையும் பிறவற்றையும் நன்குணர்ந்ததுளாதாரன் அவற்றை அவ்விப்பிரனுக்கு எடுத்துரைத்தான். ஜாஜலியும் இவற்றைக்கேட்டலும் மிக்க ஆச்சரியமடைந்தவனாய், விசேஷமாய் ஓயாமல் வாங்கிவிற்கும் தன்மையினையுடைய வர்த்தகனுடைய மகனாகிய துளாதாரன் இத்தன்மையான அபூர்வஞானக்காட்சியை யடைந்தவரலாற்றினைத் தனக்குவிளங்கவுரைக்கும்படி அந்தணன்கேட்டுக்கொண்டான். பிறவுயிர்க்கு இன்னாசெய்யாமை என்னும் சிறந்த விரதத்தையேதான் மேற்கொண்டொழுகிவந்ததே தான் இத்தகைய மேன்மையான ஞானவானானதற்குக் காரணமென்று அந்தணனுக்குத் துளாதாரன்கூறினன். தன்னுயிர்போன்ற மன்னுயிர்களுக்குத் தன்னாற்கூடுமான வரையில் தீங்குபுரியாமலும் எல்லாவற்றிற்கும் நன்மையையே புரிவதில் அவன்முயற்சித்தும் வந்தனன்; அவன் ஒருபொழுதும் ஒருவரிடத்திலும் சாத்திரத்தைக் கொள்ளவாவது ஒரு பொருளினிடத்தில் செய்தலும் இல்லை. தொன்றுதொட்ட பெரியோர்களால் அநுஷ்டிக்கப்பட்ட இவ்விதமான மார்க்கந்தான் நல்வழிக் குரித்தானதென்றும் இப்படித்தான் மனிதர்கள் தம் வாணாளை வீணாளாக்காது கழிக்கவேண்டுமென்றும், சிறந்தஞானமடைதற்கு இதுதான் ஹேதுவானதென்றும் துளாதாரன் எடுத்துக்கூறினான். எல்லாச்சிறந்த நன்கொடைகளிலும், மேலான பெருந்தவங்களிலும், பிறவுயிர்க்குத் தீங்குபுரியாமையே விசேஷமானதர்மமாகும். இத்தகைய தொழிலைக்காட்டிலும் மனிதனின் சிறந்தகடமை வேறின்றாகுமென்பது திண்ணம்.

> "சிறப்பீனுஞ்செல்வம் பெறினும் பிறர்க்கின்னா
> செய்யாமை மாசற்றார்கோள். (திருக்குறள். ௩௧௧.)

பின்னும் அநேகவிஷயங்களைப்பற்றி ஜாஜலிக்குத்துளாதாரன் உபதேசித்தான். யாகத்திற்காவது உணவுக்காவது ஜீவப்பிராணிகளைக் கொல்லவாவது மற்றப்படி அவற்றை அடித்து ஹிம்ஸித்துக்காயப்படுத்தவாவது கூடாதென்றும் அந்தணனுக்குப் போதித்தான்.

"அலைப்பான் பிறிதுயிரை யாக்கலுங் குற்றம்
விலைப்பாலிற் கொண்டூன் மிசைதலுங் குற்றம்
சொலற்பால வல்லாத சொல்லுதலுங் குற்றங்
கொலைப்பாலுங் குற்றமே யாம்."

அவ்வாட்டைப்பாருங்கள்! ஆ! ஆ! அது எவ்வாறு தன்குட்டிகளை யன்புடன் போஷிக்கின்றது! என்று துளாதாரன் கூறினான். பசு தன் கன்றுக்குட்டியை யெவ்வளவோ அன்புடன் நேசிக்கின்றது. இவற்றையறிந்தும் மனிதர்கன்றைப் பசுவினின்றும் பிரித்துப் பசுவைத் துன்புறுத்துகின்றனர். குதிரைகளையும் எருதுகளையும் பாரமான பளுவை யிழுக்கச்செய்து அவற்றை யெத்தகைய தொந்தரைகளுக்குள்ளாக்குகிறார்கள். இவ்வாறு பிராணிகளைத் தொந்தரைசெய்யவேண்டுமென்று சிறந்த வேதசாஸ்திரங்கள் கூறுகின்றனவல்ல. பண்டைக்கால ஆசாரியர்கள் பல்லோரும் எல்லாப்பிராணிகளிடத்தும் நாம்தயையாயிருக்கவேண்டுமென்றே போதிக்கின்றார்கள். இவ்வாறான உபதேசங்கள் பலவற்றைத் துளாதாரனிடமிருந்து கேட்க, ஜாஜலி மிக்ககளிப்புற்றவனைத் திரும்பவும் அநேககேள்விகள் அவனைக்கேட்டு அவன் பதிற்சொல்ல, மிகக்கவனத்துடன் கேட்டுணர்ந்தான். இன்னுசெய்யாமையினாற் போதரும் ஞானப்பெரும்பயன்களைப்பற்றிச் சாதாரண வர்த்தகன் குமாரனாகிய துளாதாரன் என்போன் சொல்ல, அந்தணஜாஜலியும் நன்குணர்ந்துகொண்டான்.

இத்தகைய துளாதார ஜாஜலியும் சீக்கிரத்தில் நிரதிசயாநந்தத்தையநுபவிக்கு மிடமாகிய பரமபதத்திற்கு, இம்மண்ணுலகை நீத்துச்சென்றனர் என்று மஹாபாரதத்தில் சாந்திபர்வத்தில் நன்குகூறப்பட்டிருக்கின்றது.

"பலதுளிபெருவெள்ளம்" என்பதுபோல எண்ணிலாத பரமாணுக்கள் ஒன்றுசேர்ந்து இப்பெரிய புவனமும் பிரம்பாண்டமானகடலுமாயிருக்கின்றன.

மனிதருடைய சிறிய பணிவுள்ள பல நற்காரியங்கள் பின்னர் நித்திய இன்பத்தையனுபவிக்கும்படியான பரமபதத்திற் கொண்டுய்க்கின்றன.

## 5. பரமதர்மம்.

உத்தமோத்தமமான பரமதர்மம் அஹிம்ஸையே என்று ஸ்ரீ கிருஷ்ணபரமாத்மா ஸ்ரீமத்-பகவத்கீதையில் திருவாய்மலர்ந்தருளியிருக்கின்றார், என்று முன்னமொருமுறை சொன்னோமன்றோ? பிறவுயிர்க்குக் கொடுமைநாடுவோன் பக்திமானாகமாட்டான். நம்மாற் கூடியவரையில் பிறவுயிர்க்குத் துன்பம் புரியாமலிருக்க முயற்சித்தால் ஸ்ரீ கிருஷ்ணபரமாத்மா திருவாய்மலர்ந்தருளியபடி நாமெவரும் நடந்தவராவோம். சிலவேளைகளில் நாம் பிறவுயிர்களுக்குத் துன்பஞ் செய்யவேண்டி வரும்.

நாம் நோயாளியாயிருந்தால் நம்மைச் சுகப்படுத்துமாறு நம்மை அப்பொழுது ஹிம்ஸிக்கவேண்டிய காரியங்களைச்செய்து துன்புறுத்த நேரிடும். இவ்வாறே பிராணிகளுக்குச் சிலவேளைகளில் துன்பத்தைச்செய்ய நேரிடும். அப்பொழுது நாம் அவற்றிற்குத் தொந்தரை கொடுப்பதனால் உண்மையிலவை யாதானும் பயனடைகின்றனவா என்பதையோர்ந்து அவற்றையவ்வாறு தொந்தரைக்குள்ளாக்க வேண்டுமேயன்றி, நாம் அவை இம்மாதிரியாய் அவஸ்தைப்படுமென்பதையாவது அல்லது அவை அவஸ்தைப்பட்டால் நமக்கென்னவென்று எண்ணியாவது அவற்றின் நலங்கருதாமல் நாம் அவற்றைத் தொந்தரைபடுத்தல் நன்றாகாது. இம்மையில் எந்தப்பிராணிகளையும் அச்சுறுத்தித் துன்பஞ்செய்யாதிருக்கிறவன்தான் இறந்த பின்னர் எவற்றினாலும் பயமுறுத்தப்படாமல் ஸுகப்படுவான் என்று மனுதர்மசாஸ்திரி என்னும் பெரியவர் கூறுகின்றார்.

"பிறர்க்கின்னா முற்பகற் செய்யிற் றமக்கின்னா
பிற்பகற் றாமே வரும்" (திருக்குறள்.)

பிறவுயிர்களுக்கு மனோவாக்குக் காயங்களினால் சிறிதேனும் துன்பத்தையே கினையாமலும், செய்யாமலுமிருந்த சிறந்த ஆசாரியர்களையும், ரிஷிகளையும்பற்றி வேதாகம சாஸ்திரங்களில் எண்ணிறந்தகதைகள் கூறப்பட்டிருக்கின்றன. அத்தகைய பெரியோர்களுக்கு அழகிய பெயரொன்றுமுண்டு. யோகியென்று சொல்லப்படும் அப்பெயர் மன்னுயிர் நண்பன் என்றுபொருள்பெறும். மலைப்பாந்

தியங்களிலுள்ளகாட்டுமிருகங்கள் அவரைத்தாக்கா. பாம்புகள், விஷ ஜெந்துக்கள் முதலியவற்றினூடே அவைகளால் தீங்குறாமல் அவர் ஸஞ்சரிக்கக்கூடும். பட்சிகளெல்லாம் அவரிடத்திலேயேவந்து சரண மடைந்து புகலிடம் பெறுகின்றன. பயமறியாப் புள்ளிமான்களும் அவர் கையினின்று மாகாரம் பெறுகின்றன. உலகத்துயிர் யா வற்றின் மேலும் வாஞ்சைவைத்துள்ளவர், மன்னுயிர் நண்பர் எனப் படுவார்.

தன்னுயிர் போலும் மன்னுயிர்களை மதிக்கிறவர்களும், பிறவுயிர் களுக்கு எள்ளளவேனும் தீங்குபுரியாதவர்களும், தமக்குண்டாகும் கோபத்தை யடக்குகிறவர்களும் இம்மையிலும் மறுமையிலும் பே ரின்பத்தை யடைகிறார்கள். எல்லா வஸ்துக்களையும் சிறிது பெரி தென்றுபாராமல் ஒவ்வொரு வஸ்துவின்மீதும் எவன் அன்புபாராட் டுகிறானோ அவனே ஈச்வரனை உண்மையாய் த்யானம் செய்பவன் என்று கருதப்படுவான். ஏனெனில், நம்பால் அன்பு பாராட்டுகிற ஈச்வரன் எல்லாவற்றையும் ச்ருஷ்டித்து எல்லாவற்றிடத்தும் ஒரே தன்மைத்தான அன்பையே பாராட்டுபவராகின்றார்.

மகத்தான யோகிகள் செய்தவண்ணமே நாமெல்லோரும் செய் யவியலாதாயினும், பின்சொல்லிய வண்ணமாய் சிறு குழந்தைகள் கூட பெரியயோகிகள் செய்ததைப்பின்பற்றிச்செய்யலாம். நமக்குத் துன்பஞ்செய்தவரிடத்தும் நாம் தயையாயிருக்கவேண்டும்.

"கறுத்தின்னா செய்தவக் கண்ணு மறுத்தின்னா
செய்யாமை மாசற்றார் கோள்"

## 6. பிழைபொறுத்தல்.

---

சிலவேளைகளில் சிறுகுழந்தைகள் ஒருவரோடொருவர் கோபித் துக்கொள்ளுகிறார்கள். ஒரு சிறுவனின் விளையாட்டுக்கருவியையோ ஆபரணத்தையோ மற்றவனெடுத்து விட்டால் அவனுக்குவரும் கோ பத்தைப் பார்த்தால் வெகுப்ரமாதமாய் விடுகிறதுடன், அவன்மற்ற வனை அப்படிச்செய்ததற்காக அடித்தும்விடுகிறான். முற்காலத்துப் பெரியோர்கள் நமக்குப் போதித்துள்ள மார்க்கங்களைச் சேர்ந்ததா

இப்படிச்செய்வது? அங்ஙனமன்று. தமக்குத்துன்பம் புரிந்தவர்களையும் அவர் க்ஷமிக்கத்தயாராயிருந்தார்கள்; பிறர் அவர்களைத்துன்புறுத்தினாலும் அவர்களுக்கு இவர்பிரதியாகத் துன்பஞ்செய்தார்களில்லை. நமக்குத்துன்பஞ் செய்தவர்பாலும் நாம் நன்மையே செய்ய வேண்டுமென்று வேதசாஸ்திராகமங்களில் அழகானவார்த்தைகளால் கூறப்பட்டிருக்கின்றன.

பிறவுயிர்களிடத்து வெறுப்புறாதவனும், பிறவுயிர்களை நேசிப்பவனும், அவற்றினிடத்துக் கருணையும்பொறுமையு முடையவனும், எனக்கு அருமையுள்ள நண்பனாவான். பெரியர் பிறர்தமக்குத்துன்பஞ்செய்த காலத்தும் அவற்றை ஸஹித்துப்பொறுத்தார் என்பதைப்பற்றிய கதைகள் அநேகமுள்ளன. திருதராஷ்ட்ர மன்னனின் ஸஹோதரனாகிய விதுரனைப்பற்றி ஈண்டுக்கூறுவாம். இவ்வரசனுக்குத் துரியோதனன் என்னும் பெயரிய குமாரனொருவனிருந்தான். அவன் நற்குணமுடையோனாயும் சாந்தசீலனாயுமில்லாது தன்னுடைய தாயாதிகளாகிய பாண்டவர்களோடு எப்பொழுதும் சண்டையிட்டும் அவர்களை மிகக்கேவலமாகவும் நடத்திவந்தான். அவர்களிடமிருந்து அவர்களது இராஜ்யத்தைப் பிடுங்கிக்கொண்டதுமல்லாமல் அவர்களைக் காட்டிற்கு துரத்திவிட்டான். அப்போது திருதராஷ்ட்ரமன்னன் தான் இந்தஸந்தர்ப்பத்தில் ஒழுகவேண்டிய விதம் என்னவென்று தன்னுடைய ஸஹோதரனாகிய விதுரனையோசனை கேட்டான். தாங்கள்தாயாதிகளாகிய பாண்டவரோடு ஸமாதானமாய்ப் போகவேண்டுமென்றும், அவர்களது இராஜ்யத்தை மீண்டும் அவர்களுக்கே கொடுத்துவிடவேண்டுமென்றும், துர்யோதனனும் அவனைச்சேர்ந்தவர்களும் அப்பாண்டவர்களுடைய மன்னிப்பை வேண்டிக்கொள்ள வேண்டித் துர்யோதனனுக்குப் புத்திபுகட்டவேண்டுமென்றும், விதுரனும் திருதராஷ்ட்ரனுக்குக் கூறினான். தன்னுடைய பிள்ளைகளை நிந்திக்க ஸமாதானமில்லாதவனான திருதராஷ்ட்ரன்தன்னுடைய ஸஹோதரன் விதுரன்மேல் மிகவும் சினந்துகொண்டான். விதுரன்பால் அவமதிப்பான வார்த்தைகள் பல மொழிந்ததுடனில்லாமல், அவனிடத்துக்ரூரமாயும் பொய்யானவார்த்தைகள் பல பகர்ந்தும் திருதராஷ்ட்ரமன்னன் அவனை மிகுதியும் நிந்தித்தான். கடைசியில் ஹிருதயபூர்வமாய் மிகக்கோபத்தோடும் அவன் விதுரனை

விட்டகன்றுபோனான். விதுரரும் அம்மன்னனைப் பதிலுக்குப்பதில் கோபியாமல் மிகுதியும் மனவருத்தமுற்றார். பின்னர் இவர்பாண்டவரிடஞ்சென்று அரசன் கோபித்தவரலாற்றை அவர்களுக்குச் சொல்லித், தம்மால் கூடியவரையில் சாந்தசீலராயும், புத்திமான்களாயுமிருக்க முயலுதலே தக்கதென்று அவர்களுக்குப்புத்திபுகட்டினார்.

(இன்னும் வரும்.)

வீ. சுப்பிரமணிய ஐயர்.

---

ஸ்ரீ:

# கதாசரித் சாகரம்.

## ரு-வது சதுர்த்தாரிகாலம்பகம் உ-வது தரங்கம்.

[ஸ்ரீமத்-வீராசாமி ஐயங்காரவர்கள் மொழிபெயர்த்தது.]

(முற்றொடர்ச்சி.)

—:o:—

உடனே யக்ஷக்ஷணத்தில் ஹே! மகாசத்துவத்தையுடையவனே! அதைக்கொண்டிப்போ தென்னுடன் வா என்று தூரத்தில் ஒரு பெண் கூறுகின்றசொல் அவன்காதில் வீழ்ந்தது. அதனைக்கேட்டது மவனச்சொல்வருகின்ற விடத்தை நாடிச்சென்று அங்கொரு பெண்ணைக்கண்டு அவளைப்பின்பற்றிச் செல்லலும் சிறிது தூரத்திலொரு விருக்ஷத்தின்கீழ் அநேகம் மங்கையர்கள் புடைசூழ்ந்துநிற்க அவர்கட்கு நடுவில் உயர்ந்த சிம்மாசனத்தில் இரத்தினமயமான ஆபரணங்களணிந்துகொண்டு பிரகாசிக்கின்றவளும் நீரில்லாவிடத்திற் றாமரைத்தடாகம்போல் அம்மயானத்தில் நேர்தற்கரிய நிலையையுடையவளுமாக ஒரு பெண்ணிருக்கக் கண்டனன்.

அப்போது அசோகதத்தன்முன் சென்றவள் அவனை மடந்தையர் நடுவிலுல்லாசமாய் வீற்றிருக்கின்ற பெண்ணினதருகி லழைத்

துச்செல்ல, அசோகதத்தன் அவ்வாறு ஆசனத்திலிருக்கின்றவளைப் பார்த்து யானிவ்விடத்தில் நரமாம்ச விக்கிரயஞ் செய்துகொண்டிருக்கின்றேன்; வேண்டுமாகிற்பெற்றுக்கொள்ளலா மென்றனன். அதற்கு அவ்வழகிய வுருவத்தினையுடைய நங்கையானவள், ஹே! மஹா சத்துவத்தையுடையவனே! இந்த மாம்சத்தை வாங்க வேண்டுமென்று விதற் கென்னவிலை கொடுக்கவேண்டு மென்றனள். உடனே அசோகதத்தனென்னும் வீரன், தன் கையிலிருக்கின்ற மணிநூபுரத்தைக்காட்டி யிதற்கிணையான மற்றொரு பாதசரம் யாரெனக்குக் கொடுக்கின்றனரோ அவருக் கிந்தமாம்சத்தைக் கொடுக்கின்றேன். அஃதிருந்தாற் கொடுத்துப் பெற்றுக்கொள்ளலாமென்று முதுகில் பிரேதவுடலை வைத்துக்கொண்ட வண்ணமே மொழிந்தனன்.

அதைக்கேட்டு அவள், இதற்கிணையான மற்றொரு காற்சிலம்பு மென்னிடத்தி லிருக்கின்றது; ஆனா லுன்கையில் வைத்திருக்கின்ற இந்த நூபுரமும் என்னுடையதுதான். முன்பு நீ யிதனை யென்னிடத்தினின்றபகரித்துச்சென்றாய். கழுவிலேற்றப்பட் டிருந்தவனுடைய பக்கத்திலிருந்தவளும் யானேயன்றி வேறில்லை. இப்பொழுது நான் வேறுருவத்துட னிருக்கின்றமையாலென்னை நீ யறிகின்றிலை; இந்த மாம்சத்தினாலென்ன பிரயோஜனம். இஃதெனக்கு வேண்டுவதில்லை. ஆனாலிப்போது நான் சொல்லுகின்றபடி செய்வாயாகில் இந்த நூபுரத்துக்கொப்பான என் மற்றொருகாற் சிலம்பையுந் தருகின்றேனென்று சொல்ல, அவ்வீரன் அதற்கிணங்கி நீ யெதைச் சொல்கின்றாயோ அதனை க்ஷணநேரத்திற் செய்துமுடிக்கின்றேனென்றனன். அப்படி யவன் சொல்லியபின், அவள் ஹே! நற்குணங்கள் நிரம்பிய உத்தமனே, யான் சொல்வதைக்கேள்; பருவதங்களிற் சிறந்த ஹிமாலயத்தின் சிகரத்தில் திருகண்டையென்னும் பெயரையுடையதொரு பட்டண மிருக்கின்றது. அதில் இராக்கதர்களுக்கு அரசனான லம்பஜிஹ்வனென்னும் பெயருடன்கூடிய சிறந்த வீரனொருவனிருந்தனன். நான் அவனுடைய மனைவி, வித்யுத்சிகையென்று பிரசித்திபெற்றுள்ளேன். யான் நினைத்த நினைத்த வுருவத்தை யெடுக்கும் வல்லமையுமுடையேன். இப்படியிருக்கின்ற எனக்

கொரு பெண்குழந்தை பிறந்தது. அக்குழந்தை பிறந்தபின் சொற்ப காலத்தில் என்பர்த்தா தைவகதியால்கபாலஸ்போடனென்னு மரசன் முன்பு யுத்தத்திலிறந்தனர். பின் பெனது பர்த்தாவுச்சூரிய நகரத்தை சந்தோஷத்துடன்கூடிப அவ்வரச னெனக்கே கொடுத்தனன்.

ஆதலா லிப்போது யானென் புதல்வியோடு அந்நகரத்திலேயே சுகமாயிருக்கின்றேன். எனது புத்திரியோ யிப்போது புதிதான யௌவனத்தை யடைந்திருக்கின்றாள். ஆதலா லவளுக்குத்தக்க சிறந்த வீரனை வரன் கிடைக்கவேண்டுமே யென்ற கவலையு மென்மனதை யடைந்திருக்கின்றது. அதுபற்றி யன்று கிருஷ்ணபக்ஷ சதுர்த்தசி யிரவினில் அரசருட னிவ்வழிச்சென்ற வுன்னைக்கண்டு இந்த யுவா வான வீரன் நமது புத்திரிக்கிசைந்த கணவனென இங்கிருந்த வண்ணமே ஆலோசித்தேன். ஆதலாலிவனை யடைவதற்கோருபாயமேன் செய்யக்கூடாதென்று கருதி, கழுவிலிருக்கின்றவள் சொல்லுஞ் சொற்களென்ற வியாஜத்தினால் தண்ணீர் வேண்டுமென்று யாசித்துன்னை ஸ்மசானமத்தியில் வீணில் வரும்படி செய்து மாயையினாற் காண்பிக்கப்பட்ட வுருவம் முதலியவற்றையுடைய ப்ரபஞ்சம் அஸத்தியமெனக் கூறுகின்றவளாக அவ்விடத்திலுன்னை க்ஷண நேரத்தில் வஞ்சித்தேன். அன்றியும் மறுபடியுமுன்னை யிங்கிழுப்பதற்காக யுக்தியினாலெனது ஒரு பாதசரத்தையும் சங்கிலிக்கண்ணிபோற் போட்டுவிட்டு யானங்கிருந்து மறைந்து போயினேன். இப்பொழுதோ யிவ்விதமிங்குவந் துன்னை யடைந்திருக்கின்றேன். ஆதலால் நீ பெங்கள் கிரகத்திற்கு வந்து எனதழகிய யுவதியான புத்திரியைப் பாரியையாக அடைந்து மற்றொரு நூபுரத்தையும் வாங்கிக்கொள்ளென்று அந்த ராக்ஷஸப்பெண் சொல்ல அவ்வீரனுமப்படியே செய்கிறேனென்று சொல்லி யவளுடைய சித்திப்ரபாவத்தினால் ஆகாய மார்க்கமாய் அவளோடந்நகரத்திற்கேகினன்.

ஹிமாலயத்தின் சிகரத்தில் சுவர்ணமயமாய்ப் பிரகாசிக்கின்ற அந்நகரமானது, ஆகாசமார்க்கத்திற் செல்லுதலாலுண்டான வருத்தத்தைத் தீர்த்துக்கொள்ளுவதற்காக சூரியபிம்பமே யசைவின்றியவ்விடத்தில் தங்கியிருக்கின்றதுபோற் காணப்பட்டது. அந்நகரத்தில் அசோகதத்தன் தனது சாகசகிருத்தியத்தின் பயனே யுருவுடன்

தோன்றியதுபோலிருக்கின்ற ராக்ஷசராஜன் புத்திரியான வித்யுத்ப்ரபை யென்பவளைப் பார்யையாக அடைந்து தன்மாமியினது சம்பத்தினால் சுகத்தை யனுபவித்துக்கொண்டு, அவ்வித்யுத்ப்ரபை யென்னும் காதலியோடு அவ்விடத்திலேயே சிலநாள் வசித்தனன்.

பின்பவன் ஒருநாள் தன் மாமியாரிடத்தில் யானிவ்விடம் வந்து பலநாட்களாயினமையா லிப்போது காசிநகரம் போய்ச்சேர்தல் வேண்டும். அவ்விடத்தி லரசன்முன்பாக யான் உன்னுடைய காற்சிலம்புக் கிணையான மற்றொரு நூபுரத்தைக்கொணர்ந்து தருகின்றேனெனப் பிரதிக்கினைசெய்துவந்திருக்கின்றே னாதலால், நீ எனக்கு வாக்களித்தபடி மற்றுமொரு பாதசரத்தையுங் கொடுக்க வேண்டும்; நான்போய்விட்டு மறுபடியும் வருகிறேன் என்றுசொல்ல, அவளும் அப்படியே செய்யென்று மற்றொரு நூபுரத்தைக் கொடுத்ததுமன்றித் தன்னிடத்திலிருந்த சுவர்ணமயமான ஒரு தாமரை மலரையுமவன் கையிற்கொடுத்துத் தனதுசித்திப்பிரபாவத்தினா லசோகதத்தனை யங்கிருந்து ஆகாயமார்க்கத்தினால் அம்மயானத்திற் கொணர்ந்துவிட்டுத் தான்முன்பு தங்கியிருந்த விருக்ஷத்தடியிலிருந்தபடியே அவனைப்பார்த்து யான் எப்பொழுதும் கிருஷ்ணபக்ஷ சதுர்த்தசி யிரவினிலிங்கு வருகின்றேன். ஆதலால் நீ மறுபடியுமெந்தளந்த நிசிவேளையி லிங்குவருவாயோ அவ்வக்காலங்களி லென்னை யிந்த ஆலமரத்தின கீழ்க்காணலாம் என்றனள்.

அதைக்கேட்டு அசோகதத்தனு மப்படியேசெய்கிறேனென்று அந்த ராக்ஷசியிடத்தில் விடைபெற்றுக்கொண்டு அம்மயானத்தினின்று மப்போதே தன்பிதாவினது கிரகம் வந்துசேர்ந்தனன். அப்பொழுது இளையகுமாரனான விஜயதத்தனை விட்டுப்பிரிந்ததனாலுண்டான வருத்தத்தை யிரட்டிக்கும்படி செய்த அசோகதத்தனது பிரிவினால் மிகவும் துக்கிதர்களாகவிருக்கின்ற அவன் தாய்தந்தைய ரிருவரும் நினைப்பின்றி யசோகதத்தன் வரவும் சந்தோஷத்தை யடைந்தனர். அசோகதத்தன் வந்துசேர்ந்தானென்ற சமாசாரத்தைக்கேள்வியுற்ற அவன் மாமனான அரசனுமக்ஷணமே யங்கு வருதலும், அவ்வரசனை யசோகதத்தன் வணங்க அரசனும் சாகச கிருத்தியத்தையுடைய அசோகதத்தனைத் தீண்டுதற்கஞ்சினவை

போல மயிர்க்கூச்சலுடன் கூடியிருக்கின்ற தனதவயவங்களா லவனைத் தழுவிக்கொண்டு நெடுநேரம் மகிழ்ச்சியடைந்தனன். பின்பவ்வரசனுட னசோகதத்தனென்பவன் சந்தோஷமே உருக்கொண்டு செல்கின்றதுபோ * லரமனைக்குட்சென்று கணகணவென்றொலிக்கின்ற ஓசையால் அசோகதத்தனுடைய பராக்கிரமத்தைப் புகழ்கின்றவை போன்ற அழகிய நூபுரங்களிரண்டையு மரசனிடங் கொடுத்து இராக்ஷஸர்களுடைய கோசக்கிரகத்திலுள்ள திருமகள் கையி லுல்லாசத்துடன் வைத்திருக்கின்ற தாமரை மலரைப் பறித்துக்கொணர்ந்திருக்கின்றதுபோற் காணப்படுகின்ற அழகிய கனகாம்புஜத்தையு மரசனிடங்கொடுத்தனன். பின்பரசன் தன் தேவியோடு வீற்றிருந்து சந்தோஷத்தினால் அசோகதத்தனிடத்தில் நடந்த காரியம் யாதென்று கேட்க, அவன், கேட்பவர் செவிகட்கினிமையை விளைவிக்கின்ற அத்தகைய தன் சரித்திர மனைத்தையும் மொழிந்தனன்.

உலகத்தி லொருவன் சாகசகிருத்தியத்தை மேற்கொள்ளாவிடில் விசித்திரமான தன்சரித்திரத்தை யுச்சரித்தலால் ஆன்மாக்களுக்கு † சமத்காரத்தை யுண்டுபண்ணுகின்ற தூயபுகழானது அவனெலப்படி யடையப்படுமென்று சொல்லிக்கொண் டவ்வரசன் அங்கு தன் மருமகனான அசோகதத்தனாற் பயன்பெற்றவனாகத் தன்னைக் கருதினன். அப்போது நூபுரங்களிரண்டையும் அடைந்த அரசனது தேவியும் அவ்வாறே கருதினள்.

அசோகதத்தன் வந்துசேர்ந்தசமயத்தில் நடந்த மஹோத்சவத்தில் வீணைமுதலிய வாத்தியங்களின் முழக்கத்துடன்கூடிய இராஜகிரகமானது அசோகதத்தன் குணங்களை யெடுத்துக் கானஞ்செய்கின்றதுபோல் விளங்கிற்று. மறுநாளவ்வரசன் அசோகதத்தன் கொணர்ந்த பொற்றாமரை மலரைத் தன்னாலியற்றப்பட்ட தேவாலயத்திலுள்ள அழகிய வெள்ளிக்கலசத்தின்மீது வைத்தான். வெளுத்தும் சிவந்துமிருக்கின்ற அக்கலசம் தாமரை மலரிரண்டும் அரசன்

---

* இதனை அரண்மனையென்னாது, அரமனையென்றே வழங்கவேண்டுமென்பது பிரயோகவிவேக நூலுட்கண்டது.

† சமத்காரமாவது - உலகிலில்லாத வஸ்துவைக் காணுதலாலுண்டாகும் மனமகிழ்ச்சிக்கு ஹேதுவாய் விளங்கும் வியப்பு.

அசோகதத்தனிவ் விருவர்களுடைய * புகழும், † ஒளியும் போற் பிரகாசித்தன.

அத்தகைய கனகாம்புஜத்துடன் பிரகாசிக்கின்ற வெள்ளிக் கலசத்தைக்கண்டு மகேச்வர பக்தனான அவ்வரசன் மலர்ந்தகண்களுடன் கூடியவனாக பக்திரசத்தின் ஆவேசத்தால் ஓ ஹோ! இப்போது பொற்கமலத்துடன் உன்னதமாய்த் தோன்றுகின்ற வெள்ளிக்கலசமானது சிவந்த நிறத்தையுடைய சடைமுடியுடன் விபூதியினால் வெளுத்த வுருவத்தினையுடைய பரமேச்வரன்போலன்றோ ப்ரகாசிக்கின்றது. இதற்கிணையா யின்னுமொரு கனகாம்புஜம் கிடைக்குமாயின், இந்த இரண்டாவது வெள்ளிக்கலசத்தின்மீதும் வைத்துத் தரிசிக்கலாமென்றுசொல்ல, அதைக்கேட்டது மசோகதத்த னுடனே அரசனை நோக்கி, ஹே! தேவ, நானுமக்கின்னுமொரு தாமரை மலருங்கொணர்ந்து தருகின்றேனென்றனன். அதற்கரசன் வேறொரு தாமரச புஷ்பம்வேண்டாம். நீ சாகசகிருத்தியஞ் செய்யாதே யென்றனன்.

பின்பு சின்னாட்கழிந்ததின்மேல் அசோகதத்தன் மற்றொரு பொற்றாமரைமலரு மரசற்குக் கொணர்ந்து கொடுக்கவேண்டுமென்று நினைக்க மறுபடியு மத்தகைய கிருஷ்ணபக்ஷ சதுர்த்தசிதினம் வந்தது. அன்றுதினம், அசோகதத்தன் ஸ்வர்னகமலத்தி லெண்ணங் கொண்டிருக்கின்றானென்பதை அறிந்து ஆகாசமாகிய தடாகத்திற்குப் பொற்றாமரை மலராயிருக்கின்ற சூரியன், தன்னையு மொருவேளை கவர்ந்து செல்வானோ வென்ற பயத்தினாற்போல அஸ்தகிரியின் சிகரத்தையடைய அப்பொழுது சந்தியாகாலத்திற் சிவந்திருக்கின்ற மேகங்களாகிய மாம்ச கண்டங்களைத் தின்னவேண்டுமென்ற கர்வத்தினாற்போல, க்ஷணநேரத்திற் புகைபோற் கருநிறத்தினையுடைய இருள்களாகிற இராக்கதர்களெங்கும் பரவவும், பிரகாசிக்கின்ற தீப வரிசைகளாகிற பல்வரிசைகளுடன் விளங்குகின்றதும் பயங்கரமானதும் மிகக்கொடியதாயுமிருக்கின்ற, இராத்திரி யென்னு மிராக்ஷஸியினது வாயானது திறக்கவும், அசோகதத்தனென்பவன் தன்மனைவி

* புகழ் - கீர்த்தி. † ஒளி - ப்ரதாபம்.
புகழை வெளுப்பாகவும், ஒளியைச் சிவப்பாகவும் கூறுதல் நூலோர்மரபு.

யாகிய இராஜபுத்திரி நன்றாயுறங்கின சமயம்பார்த்து அவ்வரமனை யினின்றும் மெல்லவெளியேறி மறுபடியு மந்தமயானத்தையடைந்து, அங்குள்ள ஆலமரத்தின்கீழ் வந்திருக்கின்ற தன் மாமியாகிய இரா க்ஷஸ ஸ்திரீயைக்கண்டனன்.

அவளுமிவனை நல்வரவுகூறி யுபசரிக்க மறுபடியுமவளுடன் அக் காளையாகிய அசோகதத்தன் அவர்கட்கிருப்பிடமாகிய ஹிமாலயத் தின் சிகரத்தை யடைந்தனன். அவன் வரும்வழியை யெதிர்பார்த் திருந்த அவனது மனைவி முதலானஜனங்கள் சந்தோஷிக்கும்படி சில காலமங்கு தன் காதலியுடனிருந்துவிட்டுத் தன் மாமியைப்பார்த்து அவன் முன்பு கொடுத்ததுபோன்றதான இன்னமொரு கனகாம்புஜ முமெனக்கு எங்கிருந்தாவது கொடுக்கவேண்டுமென்றனன்.

அதைக்கேட்டது மவள் வேறொரு கனகாம்புஜமேதெனக்கு; ஆனாலெங்க ளரசனாகிய கபாலஸ்போட னென்பவருக்கு ஒருதடாக மிருக்கின்றது. அதிலெங்கு மித்தகைய ஸ்வர்ண கமலங்களுண்டா கின்றன. அதினின்றும் அவர் சந்தோஷத்தினா லென்கணவருக் கொரு தாமரைமல ரளித்தனர் என்று சொல்ல அசோகதத்தன் ஆனாலந்தத் தடாகத்திற்கென்னை யழைத்துச்செல், நானே அதினின் றும் பொற்றாமரை மலரைப் பறித்துக் கொணர்வே னென்றனன்.

(இன்னும் வரும்.)

---

## பிழைதிருத்தங்கள்.

### கதாசரித்சாகரம்.

| தொகுதி. | பக்கம். | வரி. | பிழை | திருத்தம். |
|---|---|---|---|---|
| அ | கடுசு | க | வல்லப | அற்பபல |
| ,, | கசுo | ௬ | இவருடைய | இவரோடு |

245

உ

# வடமொழி வியாகரணத்திற்கண்ட

# சில சரித்திரக் குறிப்புக்கள்.

[இவ்விஷயம், "பிரம்மவித்யா" பத்திராதிபராக விளங்கிய ப்ரும்மஸ்ரீ: கு. ஸ்ரீநிவாஸ சாஸ்திரியார் அவர்களால் எழுதப்பெற்ற "ஸம்ஸ்கிருதபாஷை" என்ற வியாசத்தின் ஒரு பகுதியாகும். ப-ர்.]

முன்னரே அக்காலத்தில் பற்பல பாஷைகளிருந்தனவெனவும், சம்ஸ்கிருதபாஷை ஆரியர்களுக்குள் தேசபாஷையாயிருந்ததென்றும் எடுத்தோதினோமல்லவா? ஆதலாற்றான் ஆசிரியர் பாணினியார் எங்கும் உலகவழக்கச் சொற்களுக்கு இலக்கணங்கூறவெழுந்து "பாஷையில்" என்று மெதுவாகக் குறித்துவருகிறார். அதிகமாயுள்ளது முன்னரே எடுத்தோதப்பட்டது. அக்காலத்தில் நான்குவருணங்களென்னும் பாகுபாடு நன்றாக நிலைபெற்றிருந்தது. ஆதலாற்றான் அவர் சூத்திரங்களில் நான்கு வருணத்தவர் பெயரையும் தனித்தனியே எடுத்திருக்கிறார். அக்காலத்திற்றானே பிராமணர்களும் சூத்திரர்களும் தத்தம் ஆசாரங்களை விட்டொழிந்தாரென வெளியாகின்றது. "சூயாஃயஜீவிஸம்வாஸஃகஞ்ருஷ்டீவாஷீகஹ்ராஜேஷு. ஸப்ராஹ்மண ராஜந்யாஸ" என்றும், "ஶூத்ராணாமநிரவஸிதாநாம்" என்றும், இரண்டு சூத்திரங்களை அவர் எழுதியிருக்கின்றார். இச்சூத்திரங்களிற் கண்டபடி படைத்தொழிலைக் கைக்கொண்ட பிராமணரும் கூட்டத்தில் வெளியான சூத்திரரும் உண்டென வெளியாகின்றது. இத்தென்னாட்டில் இப்பொழுதும் சற்சூத்திரரெனவும், அசற்சூத்திரரெனவும் இருவகை வேற்றுமைகளிருந்துகொண்டிருக்கின்றன. இடையர் நாவிதர் இவர்களிடம்போல சற்சூத்திரர் என்னுஞ்சொல் இவர்களுக்கு இடுகுறிச்சொல்லன்று. மனுமுதலியோரால் இவர்கள் அநுலோமமுதலிய ஜாதிகளாகவே குறிக்கப்பட்டவர்கள். இனி அவர்களே சற்சூத்திரரெனவும், மற்றவர் அங்ஙனமல்லாதவரெனவுஞ் சொல்லுவோமாகில் அசற்சூத்திரரெனத் தச்சன், கருமான், வண்ணான்

தந்துவாயன் இவர்களை ஆசிரியர் பதஞ்சலியார் கூறிய கூற்று அவல மாகுமன்றோ? அவ்வாசிரியர் யாகக்கிரியையி லதிகாரமற்ற நற்சூத் திரர்களாகக் குறிப்பிடுகிறார். மற்றைய சூத்திரர்களுக்குப் பஞ்ச யக்கியங்களில் அதிகாரமுண்டென ஆசிரியர் கையடனார் கூறுகின் றார். அக்காலத்தில் ஆரியாவர்த்தத்திற்குத் தெற்கிலும் வடக்கி லும் சூத்திரர்கள் குடிகொண்டதாகப் பாஷ்யம் குறிப்பிடுகின்றது. ஆதலால் அக்காலத்தில் சற்சூத்திரரென்பவர் தென்னாட்டில் பஞ்ச யக்ஞாதி காரிகளெனவும், அவ்வதிகாரம் பெறாத தச்சன், கொல்லன் முதலியோரெனவும், அசற்சூத்திரரென்பவர் சண்டாளரெனவும், மிருதபர் (அதாவது மிருதபமென்னும் உயிர்நீங்கிய ஜந்துக்களையுட் கொள்பவர்; மிருதம்-உயிர்நீங்கியது பர்-உட்கொள்வார்) எனவும் வழ ங்கப்பட்டார்கள். "அவர்கள் டோம்பர் எனப்படுவார்கள்." என்று ஆசிரியர் கையடனார் கூறுகின்றார். இத்தென்னாட்டில் தொம்பரெ ன இப்பொழுதும் வழங்குகின்றார்கள். ஆதலாற்றான் தென்னாட் டில் சற்சூத்திரரென்னும் பதம் பெரும்பான்மை மாமிசமுதலிய வற்றையொழித்த ஒருவகை ஜாதியாரிடம் விநியோகிக்கப்பட்டு வரு கிறது. அதே சூத்திரத்தில் பெரும்பட்டணங்களில் சண்டாளர்கள் மிருதபர்கள் முதலிய ஜனங்களுடன் கலந்தே ஆரியர்கள் குடியிருந்த தாகத் தெரியவருகின்றது.

மாபாடியகாரர் "பெரும்பட்டணங்களில் ஆரியர்களின் நடுவில் சண்டாளர்களும் மிருதபர்களுங் குடியிருப்பார்கள்." என்றார். ஆரியர்களால் தந்தேசத்தினின்றுவது, தம்மினங்களினின்றுவது யக்கியமுதலிய கிரியைகளினின்றுவது, பாத்திரத்தினின்றுவது, வெ ளியேற்றப்பட்டவர்களும், வெளியேற்றப்படாதவர்களுமான இரு வகைச் சூத்திரர்கள் அக்காலத்திலுண்டென்பது வெள்ளிடைமலை போலத்தெள்ளிதிற் புலப்படும். அவர்களுள் தச்சன், கருமான் முத லியவர்களுஞ் சேர்ந்தவரென்றே ஏற்படுகின்றது. ஆதலாற்றான் ஆபஸ்தம்ப முனிவரும் "ஆரியர்கள் திட்டித்த சூத்திரர்க"ளென ஒரு வகைச் சூத்திரரைக் குறிப்பிட்டார். அக்காலத்திற்றானே நமது தேசத்தில் விக்கிரக ஆராதனை செய்யப்பட்டுவந்தது. பதஞ்சலி மாபாஷ்யத்தில் "ஜீவிகார்த்தேசாபண்யே" என்னுஞ்சூத்திரத்தில்

சிவன், கந்தன், விசாகன் இவை பூஜைக்கெனக்கொண்ட பிரதிமைகளின் பெயர்" என்றிருத்தலாலெனக. இன்னும் பற்பலவிசேஷங்கள் மாபாஷ்யத்தைப் படிப்பவர்களுக்குக் கரதலாமலகம்போல் விளங்கும். ஸூத்திரம், மாபாஷ்யம் இவை பிறந்தகாலத்தில் ஆரியர்கொண்ட தர்மநிலையும், பாஷைகளின் பெருமையும், கடவுளை அவர்கள் வழிபட்ட வழியும் சொல்லப்பட்டுள்ளன.

அக்காலத்தில் கன்மமார்க்கம் யோகமார்க்க மிரண்டும் பூர்ணமாக அனுட்டானத்திலிருந்தன. ஆதலாற்றான் பெரும்பான்மையும் கன்மகாண்ட வசனங்கள் பாஷ்யத்திலெடுத் துதகரிக்கப்படுகின்றன. அவ்விதம் அக்காலத்தில் அதர்வணவேதம் வழங்கிவந்தது. சிலர் ஆசிரியர் பதஞ்சலியார் தாமே அதர்வணவேதியென ஊகிக்கின்றார்கள். அஃது எங்ஙனமெனில், அவ்வாசிரியர் வேதவாக்கியங்களை முறையே எடுத்துச்சொல்லுமிடத்து "ஶந்நோ தேவீரபிஷ்டயே" என்று அதர்வணத்தின் முதல் வாக்கியத்தை முன் குறிப்பிட்டார். மேலும், "ஓம் என்றுரைத்து 'சம்' முதலியவாக்கியங்களைப்படிப்பான்." என்று வேதவாக்கியங்களைக் குறிப்பிடுமிடத்தும், முதலில் 'சம்' என்று அதர்வணவேதத்தின் முதற்சொல்லையே எடுத்தாராதலின் அவரது சுவசாகை அதர்வணமென்றே புலப்படுகின்றது. இப்பாஷ்யம் யாஸ்கர் நிருத்தம் செய்தபிறகே உண்டானது. ஆதலாற்றான் ஆசிரியர் "உணாதயோ பஹுலம்" என்னுஞ் சூத்திரத்தில் "பெயர், வினைச்சொற்களிற்பிறந்தனவென நிருத்தங்கூறுகின்றது" என்றார். இதனால் "நாமாந்யாக்யாதஜாநி" என்று யாஸ்கர் நிருத்தத்திற் கூறியவாக்கியத்தை மேற்கோளாகக் காட்டுவதாயிற்று. அக்காலத்தில் பிராமணர்கள் பெரும்பான்மையும் வெண்ணிறங்கொண்டவர்களாக விருப்பார்களெனத் தோன்றுகின்றது.

ஆதலாற்றான் பாஷ்யகாரர் "நஞு" என்னுஞ்சூத்திரத்தில் "கரிய நிறத்துடன் கடையிலுட்கார்ந்தவனைக் கண்டவன் அந்தணனெனக் கருதுவானே" என்றார். அக்காலத்தில் அத்துவைதமதம் சிறிது வழங்கிவந்ததாகத் தெரியவருகிறது. அவரே பிரபஞ்சம் மித்தை என்றும், சத்தை என்பது உபாதிகளின் வேறுபாட்டால்வேறு

படுமென்றும், அண்டமான சத்தமொன்றே உலகமாகத்தோன்றிய தென்றும், "ஸ்ரீயாம்வாஸஸ்நிகஷ- ஸம்ஹிதா" என்பதாதிகளான சூத்திரங்களில் "கானநீர்போலும், கந்தர்வ நகரம்போலும், ஆராய்ந் தால் அசத்தாகவொழியும்" என்றும், "இங்ஙனமாயின் ஸ்போடம் சத்தம் தொனிசத்தகுணம்" என்றும், அவர் கருத்தை வெளியிட் டாராதலாலெனக. அங்ஙனமே "வண-ாத்நஷா த்ாஸ" என்றற் றொடக்கத்துச் சூத்திரத்தில் "யஸ்யாவஷாதாதிரசயம் விஷ்யாயொ நிஸ்கேச்வ" என்று சிற்சில புராணவசனங்களை எடுத்தோதுவதா லும், 'ஜீவிகாெசயூவ' என்னுஞ்சூத்திரத்தில் பூஜைக்கென ஏற்பட்ட பிம்பங்களின் பெயரைக்குறிக்குமிடத்து "ஸிவஃ, ஸ்கஃ, விஸாவஃ" என்று சைவப்பிரதிமைகளைக் குறிப்பிடுவதாலும் இவர் சிவபக்தரெ ன்பதும் ஓர்வழி வெளியாகின்றது. ஆதலாற்றான் தென்னாட்டில் பற்பலசிவாலயங்களில் பதஞ்சலிபிம்பம் பிரதிட்டிக்கப்பட்டிருக்கின் றது. மற்றைப்பெரியோர்கள் இவர் ஆதிசேஷனம்சமெனக் கூறுகி ன்றார்கள். ஆதலாற்றான் அவரதுபிம்பம் கொப்புள்வரையிற் சர்ப் பம்போற் காணப்படுகின்றது.

அன்றியும், முண்டகோப நிடதத்திற்கு ஸ்ரீ: சங்கராசாரியர் உரைசெய்யுமிடத்துச் சிரோவிருதமென்று அக்கினிக்கப்பரையே ந்துமோர் விரதத்தை அதர்வணவேதிகள் கொள்வார்களெனச் சொல்லியிருக்கின்றார். அங்ஙனமே சில பெரியோர்கள் சிதம்பர க்ஷேத்திரத்தில் அக்கினிக்கப்பரையைத் தலையிலேந்திய பதஞ்சலிமா முனிவரைக் கண்டதாகவும் கூறுகின்றார்கள். இவைமுதலான கார ணங்களால் அவர் அதர்வணவேதி என்று மீண்டுந் துணியப்படுகின் றது. இதனால் அதர்வணவேதமென்பது புதியதெனச் சொல்வது அவலமாயிற்று. இவர்கொண்ட அத்துவைதமதம் ஸ்ரீ: சங்கராசாரி யர் கொண்ட அத்துவைதத்தின் ஒற்றுமையைச்சிறிதும் பெற்றத ன்று; என்னையெனின், இவர் சித்தாந்தம் சில சாங்கியர்கள் கொண் டதாக எமது ஆசிரியர்கள் ஊகிக்கும் "குணத்தின் கூட்டமே திர விய" மென்னும் வாதம் "தஸ்யாவஸ்தவெள" என்னுஞ்சூத்திரத் தில் இவரால் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. ஸ்ரீநாகேசபட்டர் மஞ் சூஷா கிரந்தத்தில் இதுவே பாஷ்யகாரர் சித்தாந்தமென்றுங் காட்டு

கின்றார். இதே சூத்திரத்தில் "முற்கற்பத்திற்றோன்றிய டித்தன்" என்பதாதி வசனங்களால் அக்காலத்திற்றானே மறுபிறப்பு உண்டென்னும் நம்பிக்கை நம்மவர்க்குண்டாயிருந்தது. இவரது திவ்ய சரித்திரம் ஒருவாறு ராமபத்திர தீக்ஷிதரெழுதிய பதஞ்சலிவிஜயத்திற் காணலாம். மேலும் "கைவிட்டெறிந்த கல் கைவேகமுள்ளவரையில் மேலேபோய் மீண்டுந்தன்னினமான மண்ணின்கண்ணே விழும்" என்றற்றொடக்கத்தனவான பற்பலவாக்கியங்களால் பூமியிலுள்ள ஆகர்ஷணத்தைப்பற்றி (Gravity) சிறிது குறித்திருக்கின்றார்.

மகாபாஷ்யகாலத்தில் பௌத்தர்கள் மதம் இத்தேசத்திற் பரவிவந்ததாகத் தெரியவருகிறது. ஆதலாற்றான் ஆசிரியர் பதஞ்சலியார் தொடக்கத்திற்றானே பௌத்தர்களின் வசனத்தை ஒன்றெடுத்தெழுதினர். அவ்வசனம் வைதிககன்மத்தை ஒருவழி நிந்திக்கின்றது. பிறகு 'நீவிர் இதை மயக்கத்தால் வெளியிட்டீர்; மயக்கமில்லாத மற்றைநும் சொற்கள் பிரமாணம்" என்று பதஞ்சலியார் எழுதியிருக்கின்றார். இதனால் பௌத்தமதத்திலும் அநேக விஷயங்கள்பிரமாணங்களாக அக்காலத்தவர் ஒப்பினரென்று வெளியாகின்றது. அதற்கு உரையாசிரியராகவெழுந்த ஸ்ரீமந்-நாகேச பட்டாசாரியர் இஃது பௌத்தாவதாரத்திலுள்ள ஸ்ரீமந்-நாராயணனது வசனமென்றார். இனி "வதஹோனெவஃ" என்னுஞ்சூத்திரத்தில் "ஒருவன் சொல்லுகின்றான், நிகழ்காலமில்லை" என்றற்றொடக்கத்துச் சிலசெய்யுட்களால் பௌத்தர்களுக்குள் ஏகதேசியான யோகாசாரரென்பவரின் மதங் குறிப்பிடப்பட்டது. ஆயின், அக்காலத்தில் அம்மதம், தழைத்தோங்கியதென்பதற்குத் தடையாதுமில்லை. அதில் முதலில் எடுத்துக்கூறிய வசனத்தில் "தத்ரபவந்தஃ" என்று பெரியோர்களைக் குறிக்குஞ் சொல்லால் அப்புத்ததேவரை முனிவர்மகுடமணியான ஆசிரியர் பதஞ்சலியார் எடுத்தோதுவதால், அக்காலத்தில் அப்புத்த முனி பெற்றபெரும்புகழ் வெளியாகின்றது. இவ்விதமான பலவிஷயங்கள் அதேவியாகரணத்தில் ஆராய்பவருக்குத் தெற்றெனப்புலப்படும்.

---

உ

சிவமயம்.

# நல்லொழுக்கம்.

## ஆறும் அதிகாரம்.

[ஸ்ரீமத்-இலக்குமணப்போற்றிகள் மொழிபெயர்த்தது.]

(முற்றொடர்ச்சி.)

---

அற்பக் கொள்ளையினால் ஆளுதலை நிந்திக்கும் விதத்தை முதலிலே ஏற்படுத்தினவர் லார்ட் சாதம் (Chatham) என்று சொல்லப்பட்டிருக்கிறது. அவருடைய பெரிய குமாரரும் தன் ஆளுகையில் அவ்வாறே யோக்யமாயிருந்தனர். கோடிக்கணக்கான பணம் பிட் (Pitt) என்பவரின் கைக்கு வந்து செலவாகையிலும் அவர் ஏழையாயிருந்ததைத் தவிர வேறில்லை. அவர் ஏழையாகவே இறந்தனர். அவர்மீது பகைகொண்டு, அவதூறு எழுதினவர்களுள் ஒருவராவது, அவருடைய யோக்யதையைப்பற்றிச் சந்தேகம் கூறத்துணிவுற்றவர் எக்காலத்துமில்லை.

முற்காலங்களில் உத்யோகத்தின் லாபங்கள் மிகுதியாயிருந்தன. பதினாறாவது நூற்றாண்டின் கீர்த்திபெற்றவராகிய ஆட்லி (Audly) என்பவர்தான், கோர்ட் ஆப் வாட்ஸ் (Court of wards) ல் கிரயத்துக்குவாங்கிய உத்தியோகத்தின் கிரயம் என்ன என்று கேட்கப்பட்டபொழுது, "உடனே சுவர்க்கத்திற்குப்போக இச்சிக்கிற எவனுக்கும் சில ஆயிரங்கள்; பிராயச்சித்தஸ்தலத்தில் இருக்கவிரும்பாதவனுக்கு அதிலும் இருமடங்கு; துன்மார்க்கப் பிசாசுக்குப்பயப்படாதவனுக்கு எத்தனைமடங்கு என்பது ஒருவருக்கும் தெரியாது." என்று சொன்னார்.

ஸர்வால்ட்டர்ஸ்காட் (Sir-Walter-scott) என்பவர் தன்னுடைய அந்தரங்கமான சுபாவத்தில் யோக்கியமுள்ளவராயிருந்தார். அவர் தம்முடைய கடன்களை அல்லது தான் உட்பட்ட வியாபாரச்

சாலையின் கடன்களை நிவிர்த்திக்க பலமாயும் தீர்மானபுத்தியுடனும் செய்த முயற்சிகள் அவருடைய ஜீவசரிதத்தில் மிகவும் பெரியசங்கதியாக நமக்கு எப்பொழுதும் விளங்குகின்றது. அவருடைய புஸ்தகங்களை அச்சிட்டு வெளிப்படுத்துபவர்கை முறிவுற்றபொழுது அவருக்கும் கெடுதல் நெருங்கிவிட்டது. அவருடைய பெரிய துன்பத்தில் அவருக்காக இரங்காதவர் கிடையாது. அவருடைய கடன்காரர்களுக்கு, ஒழுங்குசெய்வதற்குப் பணங்களைத்தாங்களே திரட்டும்படியான சினேகிதர்கள் முற்பட்டனர். "கூடாது, இந்தவலதுகையானது, அவ்வளவையும் வேலைசெய்து தீர்த்துவிடும்'' என்று அவர் கௌரவமாய்ப்பேசினர். "நாம் மற்றதையெல்லாம் இழந்துவிடுகிறதானல் நம் கண்யதைக்காவது தோஷமின்றிக் காத்துக்கொள்வோம்" என்று ஒரு இஷ்டனுக்கு எழுதினர். மிதமிஞ்சியவேலையால்தன் சௌக்கியமானது கெட்டுவரும்படியான காலத்திலும் தன்கையில் இறகுபிடிக்க முடியாதவரை அவர்தானே சொல்லிக்கொண்டபடி, புலிபோல் எழுதிக்கொண்டிருப்பாராயினர். தான் அதிக உழைப்பெடுத்ததால்தன் உயிருக்கு நஷ்டம் வந்தபோதிலும், தன் கண்யதையையும் தன் மரியாதையையும் காத்துக்கொண்டனர்.

ஸ்காட் (Scot) என்பவர், உட்-ஸ்டாக் (Wood-Stock) தனக்கு மரணத்தைக் கொடுக்குமென்று நினைத்த, லைப் ஆப் நெப்போலியன் (Life of Napoleon) குவார்ட்டர்லி (Quarterly) என்னும் வர்த்தமானப் பத்திரிகைக்கு விஷயங்கள், 'கிராக்னிக்கில்ஸ் ஆப் தி கானன் கேட் (Chronicles of the Conon gate) புரோஸ் மிஸ்ஸெல்லெனிஸ் ( Prose Miscellanies ) டேல்ஸ் ஆப் எ கிரான்ட்-பாதர் (Tales of a Grand-father) ஆகிய புஸ்தகங்களைத் துன்பமும் துக்கமுங் கெடுதலுமுள்ள காலத்தில் எவ்விதமாய் எழுதிவிட்டனர் என்பதை எல்லாரும் அறிவர். அந்தக் கிரந்தங்களின் விற்று முதலானது கடன்காரர்களுக்குச் செல்லாயிற்று. என் கடன்காரர்களிடத்திலிருந்து வருகிற வந்தனங்களாலுண்டாகிய ஆறுதலான எண்ணத்துடனும் கண்யமும் யோக்கியமுமான மனிதனைஎன் கடமையைச் செலுத்துகிறதை உணர்ந்த உணர்ச்சியுடனும் நான் இப்பொழுது நித்திரை செய்யக்கூடியதுபோல அயர்ந்த நித்திரை செய்திருக்கமாட்டேன். நீண்டதும் இளைப்பிக்கத் தக்கதும்

இருண்டதுமான மார்க்கத்தின் வழியே செல்லவேண்டியிருக்கிறது. ஆனால் அது குற்றமற்ற கீர்த்தியைத்தருகின்றது. நான் துன்பத்தின் மத்தியில் இறப்பேனென்று உத்தேசிக்கிற வண்ணம் இறப்பினும், கண்யதையுடன் சாவேன். என் வேலையை நான் நிறைவேற்றுகிறதானல், என்னையுற்றவரனைவருடைய வந்தனத்தையும், என் சொந்த மனச்சாக்ஷியின் நன்குமதிப்பையும் பெறுவேன்" என்று எழுதினர்.

அப்பாற் பக்கவாதத்தால் திடீரென்று முடங்குகிறவரை, அவருடைய சுட்டுக்கதைகளை முற்றும் பரிசோதித் துண்டாகிய தி பேர் மெய்ட் ஆப் பெர்த் (The fair-maid of perth) ஜீயர்ஸ்டீன் (Geierstein) பின்னும் டேல்ஸ் ஆப் கிராண்ட்-பாதர் (Tales of Grand-father) என்னும் உபந்நியாசங்கள், ஜீவியசரித்திரங்கள், மத உபதேசங்களாகிய பிரபந்தங்களை வெளிப்படுத்தினர். ஆனால் இறகு பிடிக்கத் தகுதியடையுமாறு போதுமான பலத்தை எய்திய உடனே 'லெட்டர்ஸ் ஆப் டிமானுலோஜி' (Letters of Demonology) 'விட்ச்கிராப்ட்' (Witchcraft) 'லார்ட்னெர்ஸ் சைகிளோபேடியா' (Lardners Cyclopaedia) வுக்கு, ஸ்காட்டிஸ் சரித்திரத்தின் ஓர் பாகம் அவருடைய பிரான்சுக்காரரின் சரித்திரத்தில் (Tales of Grand-father) இந்நாலாவது பாகமாகிய இவைகளை எழுத ஆரம்பித்தனர். அவருடைய வைத்தியர்கள் அவரை வேலை செய்யக் கூடாதென்று சொல்லியும் பயனில்லை. அவர் தாம்கொண்ட பிடிவாதத்தை விடவில்லை. "என்னை, வேலையை நிறுத்தும்படி சொல்வதற்குப் பிரதியாக மோல்லி (molly) என்பவர் ஒரு பாத்திரத்தை அடுப்பின்மீதுவைத்துப் பாத்திரமே சுடாதே" என்று சொல்லலாம். நான் வேலையின்றி யிருக்கிறதானல் நான் பைத்தியம்பிடித்தவனகவேண்டும்!" என்று டாக்டர் ஆபர்க்கிராம்பி (Dr. Abercrombie) என்பவரிடம் சொன்னர்.

இவ்விதமான கனத்த முயற்சிகளாற் கிட்டிய லாபங்களால் அவருடைய கடன்கள் விரைவில் இறங்குவதைக்கண்டு பின்னும் சிலவருஷங்களின் வேலையாற் கடன் நீங்கிச் சுவாதீனப்படுவதாக நம்பினர். ஆனல் அப்படி நேரவில்லை. கடினமான திமிர்வாதத்தாற் படுக்கை

யிற் கிடைபடுகிறவரை மிகவும் நொந்த சாமர்த்தியத்துடன் கௌண்ட் ராபர்ட்ஸ் ஆப் பேரிஸ் (Count Roberts of Paris) ஐப்போன்ற நூல்களை உண்டாக்குவாராயினர். அவருடைய கலப்பையானது உழவுசால் முடியும் பருவத்தை யடைந்ததாக இப்பொழுது உணர்ந்தார். அவருடைய சரீரபலம் போய்விட்டது. அவருக்குத் தன் இஷ்டப்படி சஞ்சரிக்க முடியாது. ஆயினும், அவருடைய தைரியமும் விடாமுயற்சியும் ஒருபோதும் தளரவில்லை. "மனதில் இல்லையானாலும், சரீரத்தில் மிகவும் துன்பப்பட்டிருக்கிறேன். நான் கீழே படுத்து விழியாமலே தூங்கலாமென்று பலமுறையும் விரும்புகிறேன். ஆனல் எனக்குச் சக்தியிருக்குமாகில் அதையும் போராடி வெல்வேன்" என்று தன் நித்தியசரித்திரப் புத்தகத்திற் பதிவாராயினர்.

அவருடைய கைச்சாமர்த்தியம் போய்விட்டபோதிலும் 'கேஸில் டேன்ஜரஸ்' (Castle Dangerous) என்னும் நூலை எழுதுவதற்குப் போதுமான பலத்தைத் திரும்பப்பெற்றவராயினர். அப்பால் ஆறுதலையும் சௌக்கியத்தையும் விரும்பி இத்தாலியா (Italy) தேசத்திற்குக் கடைசிமுறைபிரயாணமாயினர். நேப்பிள்ஸ் (Naples) பட்டணத்திலிருக்கையில் ஓர் புதிய கட்டுக்கதை உண்டாக்குவதிற் காலைப்பொழுதில் வெகுநேரம் செலவிட்டனர். ஆகிலும் அந்தநூல் வெளிக்கு வரவில்லை.

ஸ்காட் (Scott) என்பவர், அப்பாட்ஸ் போர்டு (Abbots ford)க்குத் திரும்பவந்து இறந்தனர். அவர் திரும்பவந்ததின்பேரில் "நான் அதிகமாய்ப் பார்த்திருக்கிறேன். என் சொந்த கிருகத்தைப்போல் அதிக விருப்பத்தைக் கொடுக்கத்தக்கது வேறொன்றுமில்லை என்று சொன்னார்." அவர் தமக்குத் தெளிவான ஓர் சமயத்தில் அவர் சொன்ன கடைசி வாக்கியம் அவருக்கு யோக்கியமானதாயிருந்தது. "என் காலத்தில் நானே மிகவும் அதிகமாய் எழுதிய கிரந்தகர்த்தாவாய் இருந்திருக்கிறேன். எந்த மனிதனுடைய சக்தியையாவது குழப்பாமலும் அவனுடைய கொள்கைகளைக் கெடாமலும் இருக்க முயன்றிருக்கிறேனென்பதையும், என் மரண காலத்தில் நீக்கிப்போடவேண்டுமென்று நான் இச்சிக்கும்படியான

யாதொன்றையும் நான் எழுதியிருக்கவில்லை யென்பதையும் நினைக்க, எனக்கு ஆறுதலுண்டாகின்றது.'' என்று அவர் தம்மருமகனை அழைத்து "லாக்ஹார்ட் (Lock Hart) ஏ உன்னிடம் பேசிக்கொள்வதற்கு எனக்கு ஒருநிமிஷம்தா னிருக்கின்றது. என் அன்பனே நல்லொழுக்கமுள்ளவனும், தெய்வ விசுவாசமுள்ளவனும், நல்ல மனிதனாகவும் இருப்பாயாக. நீ இவ்விடத்திற்கிடக்க நேரிடுங்கால்' வேறொன்றும் உனக்கு எவ்வளவு ஆறுதலையும் கொடுக்கமாட்டாது'' என்று சொன்னார்.

(இன்னும் வரும்)

---

உ

# செல்வநிலையாமை.

——[×]——

உலகத்திலுள்ள எவ்வகைப்பட்ட அருமையான பொருள்களையும் நாம் எளிதில் அடைவதற்குச் சாதகமாயிருப்பது செல்வமேயாம். பெறுதற்கரிய மானிடப்பிறவியை யெய்தப்பெற்ற ஒவ்வொருவனும் அடையற்பாலதாகிய தருமார்த்த காம மோக்ஷ மென்னும் சதுர்வித புருஷார்த்தங்களுள் முன்னைய மூன்றாகிய தருமம், அர்த்தம், காமம் என்பவற்றுள் நடுவணதாகிய பொருளொன்றை மாத்திரம் ஒருவன் அடையப் பெறுவானேயாயின் அவனை யேனைய அறமும் இன்பமும் தாமே வந்தெய்தும். இக்கருத்தை யமைத்தே,

"வடுவிலா வையத்து மன்னியமூன்றி
னடுவண தெய்த விருதலையு மெய்தும்.''

என்று அறிஞர் கூறியுள்ளார். உலகத்தில் எத்தகைய அறத்தைப் புரிவதற்கும் எத்தகுதிய இன்பத்தை அனுபவிப்பதற்கும் இன்றியமையாத கருவியாயுள்ளது செல்வமென்பதை ஒருவரும் மறுக்கார். அறம் புரியாவிடத்து வீடு அடைதல் கூடாதாகலின் அவ்வறத்துக்குச் சாதகமாய் நிற்கும் பொருள் வீட்டுக்கும் சாதகமானதென்பது சொல்லாமே அமையும். சர்வேசனது திருவடிச்செல்வ

மொன்று நீங்கலாக, உலகத்திலுள்ள அரும்பொருள்கள் யாவும் இமைப்பொழுதில் மாய்ந்துவிடத்தக்கனவென்பது மேலோர் கூறிய சித்தாந்தம். இதற்கு இலக்கியமாக நிற்பவை யாக்கை, இளமை, செல்வம் முதலியன. உலகத்தில் பெறுதற்கரியனவாய் நிலையாமையிற் சிறந்தனவாயுள்ள எல்லாப்பொருள்களிலும் யாக்கை, இளமை, செல்வம் என்னும் இம்மூன்றும் சிறந்தன. அவற்றுள் நிலையாமையில் மிகச்சிறந்தது செல்வமேயாம். மக்கள் ஆயுள் நூறு வயதென்றும் இளமைப்பருவம் முப்பது வயதென்றும் அறிஞர் யாக்கைக்கும் இளமைக்கும் ஒரு காலவரையறை நிர்ணயித்திருக்கிறார்கள். அங்ஙனம் செல்வத்துக்கு ஒரு காலவரையறை எவரேனும் ஏற்படுத்தியிருப்பதாக நாம் யாண்டுங்கண்டதில்லை. ஏனைப் பதார்த்தங்களைவிட, செல்வத்தினிடத்து நமக்கு அதிக அவா இருத்தற்கு இரண்டு காரணங்களுண்டு. முதலாவது—மேலே எடுத்துக்காட்டியபடி எவ்வகைப்பட்ட பதார்த்தங்களையும் எய்துவதற்குச் செல்வம் பெருங்கருவியாயிருக்கிறபடியினால் அதனிடத்து ஆன்மாக்களுக்கு அதிக விருப்பமுண்டாகின்றது. இரண்டாவது—கிடைத்த செல்வம் நீடித்து நம்மிடம் நிற்குமாயின், அதனிடத்து வாஞ்சை குறையும். அது வெகு சீக்கிரத்தில் உடையானை விட்டகலு மியல்பினையுடையதாதலின், அதனிடத்துண்டாகும் அவா பெரிதாயிருக்கின்றது. எந்தப்பொருளானது அதிசீக்கிரத்தில் அகலும் தன்மையதோ அது மிக்க அவாவை விளைவிக்கின்றதென்பது அனுபவசித்தம். மனோதத்துவ சாஸ்திரமும் இவ்விஷயத்திற்குச் சாட்சிபகரத்தக்கது. மாதர் இன்பத்தை மகாமேருவைப்போல் நம்மைநினைக்கச் செய்வதும் அதை அடிக்கடி அவாவும்படி நம்மைத் தூண்டுவதும் எது? அவ்வின்பத்தின் நிலையாமையேயாம். அது க்ஷணநேரத்தில் ஒழிகின்றபடியாற்றான் அதனை மீண்டும் அடையவேண்டும் எனனும் பேரவா ஆன்மாக்களிடத்தில் நிகழ்கின்றது. இதுபோலவே செல்வத்தின் அநித்தியமே அதனை நாம அவாவுதற்குக் காரணமாயிருக்கின்றது. செல்வம், தரித்திரம் என்னும் பதங்கட்குச் சில தமிழ்ப்புலவர்கள் ஒரு விநோதமான உரை கூறுவதுண்டு. செல்வம் தன்னை உடையானைக் கண்டுஎப்போதும் செல் (வோம்) வம் (யாம் உன்னை விட்டுப்போவோம்) என்றும், தரித்திரம் தன்னையுடையானை

நோக்கி தரித்தி (ரோம்) ரம் (யாம் உன்னிடத்தில் எப்போதும் தரித்து இருக்கமாட்டோம்) என்றும் கூறுவதாகப்பொருள் உரைப்பர். இந்த உரை அப்பதங்களின் உண்மைப்பொருள் அல்லவாயினும், அதில் ஒருவகை யதார்த்தம் மாத்திரம் இனிது விளங்குகின்றது.

இறுதியிலே காரியமாயமையும் இன்பத்தினிடத்து நாம்கொள்ளற்குரிய ஆசையானது - அவ்வின்பத்தை யடைவதற்குக் கேவலம் காரணமாக மாத்திரமுள்ள செல்வத்திடத்தில் பொருந்தியிருப்பது மனிதனுடைய மனோதத்துவ லட்சணமாயிருக்கிறது. காரியத்தை மறந்து கருவியினிடத்தே பேரவாக்கொண்டிருத்தல் மனதுக்குற்ற ஒருவித இயற்கை என்பது மனோதத்துவ சாஸ்திரிகளின் கருத்து. ஆகையினாற்றான் அநேகர் அறத்தைப்புரிந்து இன்பத்தை நுகர்ந்து முடிவில் வீட்டை அடைவதற்கு வேண்டிய காரியங்களைச் செய்யாமல், அவற்றிற்குக் கருவியாயுள்ள பொருள்களோடு ஒழிந்து வாணாளை வீணாளாக்கி மரிக்கின்றனர். செல்வம் வந்தகாலத்துக் காலதாமதமின்றி, நமக்கும் பிறர்க்கும் பெரும்பயனைத் தரத்தக்க கருமங்களை வெகுசீக்கிரத்தில் நாம் செய்து முடிக்கவேண்டியதென்ற எண்ணத்தைக்கொண்டே ஜகதீசன் அதற்கு அவ்வளவு நிலையாமையைத் தந்திருக்கின்றார். இதனை உணரு மதுகை யில்லாச் சிலர்,

“உடாஅது முண்ணாதுந் தம்முடம்பு செற்றுங்
கெடாஅத நல்லறமுஞ் செய்யார்—கொடாஅது
வைத்தீட்டி னாரிழப்பர் வான்றோய் மலைநாட
வுய்த்தீட்டுந் தேனீக் கரி”

என்னும் அமுதவாக்குக்கு உதாரணமாகின்றார்கள். செல்வத்தினிடத்து மனிதர்களுக்குண்டாயிருக்கும் பேரவாவைக்குறித்து ஒரு சிறு கதை சொல்லப்படுகின்றது. அதாவது:—

ஒரு ஊரில் தனபாலகனென்றொரு வணிகன் இருந்தான். அவன் மேலும் மேலும் பொருளை ஈட்டுதலிலேயே அவாக்கொண்டிருந்தானேயன்றி அதில் எவ்வளவையும் பிறர்க்கு வழங்குவதுமில்லை, தானும் அனுபவிப்பதுமில்லை. நன்றியில் செல்வமென்று மூதறிஞரால் இகழ்ந்துரைக்கப்பட்ட தன்மையை நச்சுமரம் பழுத்ததுபோன்ற அவனுடைய செல்வம் பெற்றிருந்தது. அறிவில்லாத

வன் தன்பொருளை என்னது என்னது என்று சொல்லிக்கொண்டு இருக்கின்றான், அவனுடைய பொருளை யானும் என்னது என்னது என்று சொல்லிக்கொண்டு இருப்பேன், அப்பொருள் என்னதன்று; தன்னதுதான் என்று அவன் கூறுவதற்கும் நியாயமில்லை; ஏனெனில், அப்பொருள் அவனதாயிருக்குமாயின், அவன் அதனைப் பிறருக்கெடுத்துக்கொடுப்பான், தான் அனுபவிப்பான், அங்ஙனம் அவன் செய்வதில்லை, யானும் அவனிடத்துள்ள அப்பொருளைப் பிறருக்கு வழங்குவதுமில்லை, அனுபவிப்பதுமில்லை; ஆகலின் அப்பொருளை என்னதென்று யானும் சொல்லிக்கொண்டு திரியலாமே என்னும் அருமைக் கருத்தமைந்த,

"எனதென தென்றிருக்கு மேழை பொருளை
எனதென தென்றிருப்பன் யானும்—தனதாயிற்
றானும தனைவழங்கான் பயன் துவ்வான்
யானு மதனை யது.

என்னும் அற்புதகவி அவ்வணிகன் பொருட்டே செய்யப்பட்ட தபோலும். மேன்மேலும் செல்வம் தனக்குச் சேரவேண்டுமென்று ஏக்கங்கொண்டு அவன் செல்வநாயகியாகிய இலட்சுமியை அல்லும் பகலும் பிரார்த்தித்துவந்தான். அப்பிராட்டி அவனுடைய நல்வினைக்கிடாக அவனுக்குச் செல்வத்தை விருத்திசெய்துகொண்டே வந்தனள். இப்படியிருக்க, தனபாலகன் தன்னுடைய செல்வத்தையெல்லாம் ஒருநாள் பார்த்து ஐயோ! இஃது ஒருகாலத்து என்னை விட்டகலுமோ? என்று துக்கித்து, அன்று இலட்சுமிப் பிராட்டியை நோக்கி அதிவிநயத்துடன் பிரார்த்திக்கவே அவள் பிரசன்னமாகி உனக்கென்ன வரம்வேண்டுமென்று வணிகனை வினவினாள். அம்மே! ஒன்றுவேண்டும், இந்தச் செல்வம் என்னிடத்திருப்பதற்கு நீ என்னிடத்துத் தங்கியிருப்பதே காரணமாகும்; நீ என்னை விட்டகலுங்காலத்து இச்செல்வமும் என்னைவிட்டகலும்; நீஎன்னைவிட்டு வேறொருவனிடத்தில் போவதாயிருந்தால் இன்ன தினத்தில் என்னைவிட்டகலுவேனென்று என்னிடத்து முன்பாகச் சொல்லவேண்டியதோடுங் கூட, போகும் தருணத்திலும் அப்பா! போகின்றேன் என்று என்னை நேரில் கண்டு சொல்லிவிட்டுச் செலவு பெற்றுக்கொண்டும்

போகவேண்டியதென்று குறையிரந்தான். தனபாலகன் நெடுங்காலமாகத் தன்னிடத்தில் அதிக பக்தி பாராட்டி வந்தவனாதலின் பிராட்டியாரும் அவ்வேண்டுகோளின்படி அப்படியே ஆகுக என்று உறுதிமொழிகூறி மறைந்தனள். சிலகாலஞ் சென்றபின்பு வணிகன் அடியில் வருமாறு தனக்குள் சிந்திக்கலாயினான். "திருமகள் என்னை விட்டகலும்போது என்னை நேரிற்கண்டு, போகின்றேன், என்று சொல்லி என்னிடத்தில் விடைபெற்றுக்கொண்டு ஏகுவதாய் உறுதிமொழி கூறினள்: அத்தேவியார் சொற்றவறாள்; நான் உயிரோடிருந்தாலன்றோ என்னை நேரிற்காண்பாள்; நான் இறந்துபோவேனேயாகில் தன் வாக்குறுத்தத்தப்படி என்னைப்பார்க்க அவளுக்கு இசையாது என்னிடத்தில் சொல்லாமலே அவள் என் வீட்டைவிட்டகலக்கூடாதன்றோ? ஆகவே இச்செல்வம் என் இல்லத்தைவிட்டகலுவதற்கிடமிராது." என்று குயுக்திபண்ணிக்கொண்டு ஒரு பாழ்ங்கிணற்றில் வீழ்ந்திறந்தான்.

நிலையில்லாச் செல்வத்தினிடத்து அப்புல்லறிவாளனுக்கிருந்த பேரவா அவனுடைய அகாலமரணத்துக் கேதுவாயிற்று. "செல்வமொன்றுண்டாக வைக்கற்பாற்றன்று." என்று பெரியோர் கூறிய பொய்யாமொழியை உணராது அவன் வீணாக மரித்தனனே! பரிதாபம்!

---

உ

## உள்ளத்தெளிவு.

(முற்றேடர்ச்சி.)

---

உள்ளத்துக்கண் தெளிதலெனப் பொருள்பட்டு நிற்கும்; தெளிதலென்பது சிவஞானசித்தாந்த சாத்திரங்களான் எல்லாம் வல்ல முழுமுதலினிலக்கணம் இனைத்தெனவும், அம்முழுமுதலினருண் மாட்சியான் பலதரப்பட்ட ஆன்மாக்களினிலக்கணம் இனைத்தென வும், அவ்வான்மாவினது யதார்த்த நிலைமை தோன்றவொட்டாது

செம்பிற்களிம்பென மறைத்து அஞ்ஞானமிகுதியாற் பரந்தபாசத்தி னிலக்கணம் இனைத்தெனவும் யூகித்து நுனித்துணரற்படுவன தெளி வுசான்ற தெள்ளியார் செயலாகும். உள்ளம் உலகமயக்கால், அதன் வசப்பட்டு அறிவையுமதன்பாலிழுத்து ஒருமைப்படுத்துக்காட்டு வது ஓர் அரும்பெரிய வியல்பு. அறிவினுக்குப் பாகுபாடுகாணும் வன்மை நிலைபெற்றிருப்பினும் ஞானசாத்திரம் முதிர்ச்சியிலாதொ ழிந்ததான் பாலொடுகலந்த நீர் எனப் பேதமிலாது நிற்குமென்க.

நான் ஆர். என் உள்ளம் ஆர். ஞானங்கள் ஆர். என்னையாரறி வார். என்ற தோரரும் பெருந்திருவாக்கின்படி நான்யார். நானாவித பேதமாக அதி அற்புதமாகத் தோன்றிமெய்மைபோற் காணப்படும் இப்பிரபஞ்சங்கள் யாவை. இவற்றிடையில் யான்வந்து பிறந்தது ஏன். அப்படிப்பிறந்து பலவகையாகிய துன்பங்களை அனுபவித்து வருத்தமடையும்போதும் இடையிடையே, அவற்றைமறந்து எப் போதும் நான் இவ்வுலகத்திற்றானே சாசுவதமாய் இருப்பது ஏன். என்பெண்டாட்டி பிள்ளை, சொந்தக்காரர், பிறர்கள் என்னுமிவர்க் கும் எனக்கும் உள்ளதொடர்பு என்னை? ஏனையோர்களிடத்திலெல் லாம் அன்புள்ளவனாக யான் ஒழுகாது, என் மனைவிமக்களிடத்து மட்டும் யான் கணக்கில்லாத அன்புகொண்டுநிற்பது என்ன அறியா மை. யான் இறக்குங்காலத்து அவர் அவ்விறப்பினை நீக்குவரா? அன் றி யான் பிறக்குங்காலத்து அவர் அப்பிறப்பினை நீக்குவரா? யான் துன்பத்தையடையுங்காலத்து அவர் அத்துன்பத்தை நீக்குவரா? இவர்களெல்லாம் ஐயோ, எம்மைப்போலவே துன்பமடைகின்றார் கள், பிறக்கின்றார்கள், இறக்கின்றார்கள், இறப்பார்க்கு இறப்பாரும்; துன்பமடைவார்க்குத் துன்பமடைவாரும், துணையாவதெவ்வண் ணம். ஐயோ! இத்துன்பத்தினின்றும் எவ்வாறு நீங்குவேன். இறக் கவேண்டும் என்பதனை நினைக்குங்காலத்து, என்மனம் பகீர பகீரெ னத்துணுக்குறுகின்றதே. என விவையனைய பிறவற்றையும் காட்டி உண்மை சாதித்தொழுகும், பேரறிவாளரனைத்தாரும், இடித்திடித்து க்கூறினராவர். (பூவினிற்கந்தம் பொருந்திய வாறுபோல்) எங்கு நிறைவுள்ள பரம்பொருள் இன்னதெனக் கண்டு நிலைமைபெறுவது தான் தெளிவாகும்.

......................திருமாலோடு நான்முகனுந்
தேடித்தேடொணுத்தேவனையென்னுள்ளே. (தேடிக்)

என நம் சைவத்திருமறை கூறுவதுமீண்டு ஆராயத்தக்கதாகும். அங்ஙனமாயதேவனை என்னுள்ளே தேடிக்கண்டுகொண்டேன் என்றிருப்பது தெளிதலடைந்த விடமென்க.

முழுஞானமாணிக்கமான திருமூலரென்பார்—(சென்றேபுகுங் கதியில்லை நஞ்சித்தது—நின்றேநில்லைபெறநீர் நினைந்துய்ம்பினே) என்கின்றனர். அன்றி, (தலையாகச் செய்வானுந்தான்) என்பதுங்கருதற்பாலதாகும். தெளிவில்லாதவர் மனம் மருண்டவுணர்வினது சம்பந்தத்தால் யாவும் நான் நான், எனச்சுழல்கின்றது. ஆகவே, அம்மருட்சி பற்பல சனனந்தொட்டே தொடர்ந்தாகும். பஞ்சினைமலை மலையாகக்குவித்து ஒருசிறுதீப்பொறியிடின், முற்றும் எரிந்தடங்குதல்போல, கணக்கில்லாத பிறவிகளில் புண்ணியபவஞ்சமமெய்தியேதோசிறிது தவமிகுதியான் ஆருமுணர்வுதோன்றி அது பாசபந்தத்தாற்ருக்குண்ணுது, உண்மைதெளிந்து சிவோகம்பாவனை செய்தலாற்ருன் தெளிபு உள்ளத்தின்கண்ணே நழுவாதிருக்குமென்க. சலனமில்லாது நிலைமைகடைப்பிடிப்பதுக்குத்தான் சிவஞானசாத்திரமாய்தல்வேண்டும். இங்ஙனஞ்சாத்திரவாராய்ச்சி யில்லாமலே, தெளிபுபெற்ருரில்லையோவெனின், நன்றுசொன்னுய். அக்காலத்து அசையாவுள்ளம் பெற்று ஓரேபடித்தாமுற்றவர்களும், (உணர்ந்தவருளத்தினுணர்த்தியவுணர்வே) என்பதால், அறிவினுக்கு காற்ருடிபோன்ற சுழற்சி அமைந்ததாகும். காற்றுநின்றவிடத்து, அது அசையாதிருத்தலைப்போல, விடயத்திற்பற்ருது நிற்கும்போது மெய்ம்மை, பொய்ம்மை, என்பதன் பகுப்பு இன்ன இன்னவெனத்தோன்றும், உள்ளம் சலனத்தையடையும்போது சாத்திரவுணர்ச்சி உடைசோர்ந்தவிடத்துதவிபுரியுங் கரம்போலக் கைதூக்கிவிடும் என்க. (செய்கருமம் வல்லாரேயானும் வளம்பெருர்) நூலுணர்ச்சியில்லார் என்பது உண்மையேயாகும். மெய்யறிவினையெழுப்பி நன்னிலை ஈதென அறிவிப்பது நூலுணர்ச்சியேயாகும். நூலுணர்ச்சி குன்றி ஒருவன் உள்ளத்தெளிவுபெற நினைப்பானேல் தண்ணீர்நிலை காட்ட மண்குதிரையைத் துணை பெற்றதுபோலாம். மெய்யறிவினுற்ருன் உண்மைதெளிபு, இவையனையபிறவும் விளங்குமென்க.

ஐயறிவறிந்தவையடங்கினவரேனு
மெய்யறிவிலாதவர்கள் வீடதுபெறுரே.

என்பது தெள்ளிய தீவிரவுரையாகும். நிமிடத்துக்குநிமிடம் மாறுதலடையுந்தன்மையும், சலிப்புங்களிப்பும், அளவில்லாதனவாய் உள்ளத்துக்குடைமையாகிநிற்கின்றன. சித்தசுத்திபெற்றுநிற்க வேண்டும் எனப்பெரியார் முடிபுரை கூறுவதனைத்தும், இவ்வுள்ளத்தெளிபுதான் மனவடக்கம்பெறின், நாவடக்கமமையும்; நாவடக்கமமைய வியவகார மொழியும், வியவகாரமொழிய மனோலயம் எய்தும், எய்தவே சிவச்சீவபேதமுணர்ந்து மயப்பட்டு தெளிதலடைந்து நிற்றலாகுமென்க. (தொடரும்.)

நா. இராமசாமிவன்னியன்.

---

உ

# சோதிடகணிதம்.

(முற்றெடர்ச்சி.)

## வாக்கியபலன்கள்.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | 20 | 19 | 9 | 16 | 17 | 17 | 270 | 9 |
| 2. | 39 | 20 | 10 | 183 | 16 | 18 | 278 | 8 |
| 3. | 59 | 20 | 11 | 198 | 15 | 19 | 285 | 7 |
| 4. | 78 | 19 | 12 | 213 | 15 | 20 | 291 | 6 |
| 5. | 97 | 19 | 13 | 226 | 13 | 21 | 295 | 4 |
| 6. | 115 | 18 | 14 | 239 | 13 | 22 | 298 | 3 |
| 7. | 133 | 18 | 15 | 252 | 13 | 23 | 300 | 2 |
| 8. | 150 | 17 | 16 | 261 | 9 | 24 | 301 | 1 |

## குஜஸ்புடம்.

மேல்நின்ற குஜமத்தியத்தில் மந்தோச்சம்வாங்கி இராசனதனமறிந்து புசாகோடி செய்து வாக்கியம் கண்டுவந்த பலனைப் பாதிசெய்து குஜமத்தியத்தில் கூட்டல் கழித்தல் செய்ய அர்த்த மந்தமாம்.

இந்த அர்த்தமந்தத்தில் சூரியமத்தியத்தைக்கழித்து, இராசனமறிந்து கர்க்கிஜா மகரஜா கண்டு புஜாகோடிசெய்து வாக்கியம் கண்டுவந்த பலனைப்பாதிசெய்து அர்த்தமந்தத்தில் கூட்டல் கழித்தல் செய்ய அர்த்த சீக்கிரமாம்.

ஷை அர்த்தசீக்கிரத்தில் மந்தோச்சம்வாங்கி இரணதனமறிந்து புஜாகோடி செய்து வாக்கியங்கண்டுவந்த பலன் முழுவதையும் குசமத்தியத்தில் கூட்டல் கழித்தல் செய்ய பூர்ணமந்தமாம்.

மேலேகண்ட பூர்ணமந்தத்தில் சூரியமத்தியத்தைக் கழித்து இரணதனமறிந்து கர்க்கிஜா மகரஜாகண்டு புஜாகோடிசெய்து வாக்கியங்கண்டு வந்தபலன் முழுவதையும் மேல்பூரணமந்தத்தில் கூட்டல் கழித்தல் செய்ய குசசுத்தஸ்புடமாகும்.

## வாக்கியபலன்கள்.

——:o:——

| | மந்தசா. | | மகரசா. | | கடகசா. | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 40 | 40 | 90 | 89 | 434 | 434 | |
| 2 | 81 | 41 | 179 | 89 | 837 | 403 | |
| 3 | 124 | 43 | 267 | 88 | 1193 | 356 | |
| 4 | 167 | 43 | 356 | 89 | 1494 | 301 | |
| 5 | 211 | 44 | 443 | 87 | 1737 | 243 | |
| 6 | 255 | 44 | 532 | 89 | 1942 | 205 | |
| 7 | 300 | 45 | 618 | 86 | 2084 | 142 | |
| 8 | 344 | 44 | 705 | 87 | 2198 | 114 | |
| 9 | 388 | 44 | 791 | 86 | 2282 | 84 | |
| 10 | 430 | 42 | 875 | 84 | 2342 | 60 | |
| 11 | 472 | 42 | 960 | 85 | 2380 | 38 | |
| 12 | 513 | 41 | 1044 | 84 | 2400 | 20 | இதுமுதல் கிரகம் வக்கிரம் என்பர். |
| 13 | 552 | 39 | 1126 | 82 | 2404 | | |
| 14 | 558 | 36 | 1209 | 83 | 2398 | 6 | |
| 15 | 622 | 34 | 1290 | 89 | 2382 | 16 | |
| 16 | 653 | 31 | 1368 | 78 | 2353 | 30 | |
| 17 | 682 | 29 | 1448 | 80 | 2322 | 30 | |
| 18 | 707 | 25 | 1525 | 77 | 2282 | 40 | |
| 19 | 729 | 22 | 1600 | 75 | 2237 | 45 | |
| 20 | 747 | 18 | 1674 | 74 | 2188 | 49 | |
| 21 | 761 | 14 | 1746 | 72 | 2134 | 54 | |
| 22 | 771 | 10 | 1816 | 70 | 2077 | 67 | |
| 23 | 778 | 7 | 1886 | 70 | 2014 | 63 | |
| 24 | 780 | 2 | 1952 | 66 | 1952 | 62 | |

இதுவரையிற் சொல்லி வந்ததைச் செய்து கீழே காட்டுகின்றேன்.

இந்த சௌமியஹூ தைமீ 23உ ஸ்திரவாரம் இரவு 1மணி 20. நிமிஷத்திற்கு தஞ்சாவூர்ஜில்லா திருவையாற்றில் ஒருகுழந்தை ஜநநமானதாக எடுத்துக்கொள்ளுவோம். அதற்கு 42. சௌமியவருஷம்வரையிற் சென்ற பிரபவாதிதொகை 1789 கூட்ட சாலியவாகன சகாப்தம் 1831+3179 கூட்ட கலியாப்தம். இதனை 365ல் பெருக்கக்கூடியது.

| | நாள். | நாழி. | வினாடி. | தார்ப்பரை. |
|---|---|---|---|---|
| | 1828650 | | | |
| மறுபடி கலியாப்தத்தை 4ல் வகுக்கக்கூடியது | 1252 | 30 | | |
| புனரபிகலியாப்தத்தை 5ல் பெருக்கி 576-ல் வகுத்து நாழி வினாடி தர்ப்பரை வரையிற் கிடைத்தது. | 41 | 20 | 31 | 15 |
| மொத்தம் ... | 1829943 | 50 | 31 | 15 |

ஆக இந்த சௌமிய வருடம் 50 நாழிகை 31 வினாடி 15 தர்ப்பரைக்கு பிறந்தது. இது வாக்கிய பஞ்சாங்கத்தில் ஒத்திருப்பதைப் பார்க்கலாம். இனி, கிழமை சரியாயிருக்கின்றதாவென்று பார்க்க. 7னல் வகுத்துவந்த மிச்சத்தை வெள்ளிக்கிழமை முதலாக எண்ணிய மறுதினம் வருஷப்பிரவேசமாகும். இதன்படி 7-க்கு கொடுக்க கிடைத்தமிகுதி 3-க்கு ஆதிவாரத்தன்று மறுதினம்உதயாதி 50-31 க்கு ரவிபிரவேசம்.

இதற்குமேல் தைமீப் பிரவேசத்திற்கு மார்கழிமாத வாக்கிய மான 275. 39. 30. வினாடியைக்கூட்டக் கிடைப்பது 1830219. 30. 1. 15. இதனையும் ஒப்பிடுக மேல், முதனாட்டெய்தி வரையிற்சேர்க்கக் கூடியது...........1830241. 30. 1 15. அல்லது 1830242

இதனின்றும் கழிக்கவேண்டியது. 1683112

மிகுதி 147130

இதுதான் நவக்கோள் கண்டமென்பது.

இனி சூரியமத்தியஸ்புடம் செய்ய.

147130 தை, 31-ல் பெருக்கி 11323-க்கு கொடுத்துப்பெற்ற மீதம் 9184. இதனை இராசி பாகைகலைக்கு கொண்டுவர ராசி பாகை கலை 12, 30, 60ல் பெருக்கி வகுக்கு மெண்ணுன 11323க்குக் கொடுத்து

| | ராசி. | பாகை. | கலை. |
|---|---|---|---|
| | 9 | 21 | 59 |
| பின்னும் 147130தை 10026க்கு கொடுத்து கழிக்கவேண்டியதற்கு | ,, | ,, | 15 |
| (இது ஜனனத்திற்கு முதல்நாள்வரைமிகுதி இராசி | 9 | 21 | 44 |

இனி அன்றை நிமிஷம் வரையிற் கிடக்க.

திருவையாறு கும்பகோணத்திற்குமேற்கிலும் தஞ்சைக்குவடக்கிலுமிருப்பதால் சுவதேச அக்ஷாம்சம் 11 என்றே கொள்ளுவோமாயின் இதற்குரிய மேஷாதி இராசிமான நாடி வினுடிகள் முறையே மேஷமுதல், 273, 306, 329, 321, 305, 300, 318, 321, 289, 261, 254, மீனம் ஈறாகநிற்கும். 23உ இரவு 1-மணி 20-நிமிஷத்திற்கு புதிய ஸ்டாண்டார்டு டயத்திற்காக 9-நிமிஷம் நீக்க 1-மணி 11-நிமிஷத்திற்குக் கிடைத்தது நாழிகை 47. 57½ வினுடி, இதற்கு உதயாதி மகாலக்னத்தில் நிற்பது நாழிகை வினுடி 8 முதற் கூடியது 45, 30, துலாம்போக, விருச்சிகத்திற்கு செல்லு 2 நாழி 27½ நித்தியகதி 59 பாகை 8 கலையாக 47 நாழிகை 57½-க்கு கூடிய பாகை கலை 47 18. இதனை முன்பெற்றவைகளுடன் சேர்க்க கிடைத்தது. } இராசி 9, 22, 31, 18,

இதுசூரிய மத்திமம். இதனின்றும் மந்தோச்சமான 2. 18. கழிக்கக் கண்டமீதம் 7, 4, 31-க்கு தனம். புஜா வாக்கியம் 9ம் கலை 46. வாக்கிய பலன் 72, அடுத்த 8ல் 46 கலையைப் பெருக்கி 225-க்

| | ° | ′ |
|---|---|---|
| கீந்து வந்த ஈவு கலை. இது 2 ஆக பலன் 74 அல்லது | 1. | 14. |

இதனை சூரியமத்தியத்தில் கூட்ட 9. 23, 45.

| | R | ° | ′ |
|---|---|---|---|
| ஆக சூரிய சுத்தஸ்புடம் இராசி | 9 - | 23 - | 45 |

265



முன்பக்கத்தில் சூரியசுத்தஸ்புடம் இதுவெனக் காட்டினோம். இனி சந்திரனுக்கு-நவக்கோள்கண்டமான 147130-ஐ 600-ல் பெருக்கி 16393-க்கு ஈந்து சேடத்தை 12, 30, 60-ல் பெருக்கி வகுக்குமெண்ணால் வகுத்துக் கண்டது இராசி 1—7—13.

மறுபடி கண்ட சேஷவகுக்குமெண்ணை

| | R | ○ | 1 | |
|---|---|---|---|---|
| 2920-ல் 147130-ஐ வகுக்கவந்த கழிக்கவேண்டியதொகை | 0 | 0 | 50 | |
| மிகுதி | 1 | 6 | 23 | |
| இதனுடன் நாள் ஒன்றுக்கு நித்தியகதி 13 பாகை 10 கலை 35-விகலையாக 47-நாழிகை 57½ விநாடிக்குக் கூடியது பாகை ... | 10 | 56 | 28 | 0 |
| துருவக்கூட்ட சந்திரமத்தியம். | 6 | 19 | 17 | |
| ஆக இராசி ... | 8 | 6 | 36 | |

இந்தச் சந்திரமத்தியத்தினின்றும் துங்கமத்தியத்தைக்கழிக்க:—

| | இராசி | பாகை | கலை |
|---|---|---|---|
| நவக்கோள்கண்டமான 147130-ஐ 3232-ல் வகுத்துவந்த மிச்சத்தை 12, 30, 60-ல் பெருக்கி வகுக்க வந்த ஈவு ... | 6 | 8 | 15 |
| மறுபடி நவக்கோள் கண்டத்தை கண்டசேஷவகுக்குமெண்ணை 768-ல் வகுக்கவந்தது | 0 | 3 | 11 |
| போக | 6 | 5 | 4 |
| நித்தியகதி | 0 | 0 | 5 |
| துருவம் | 11 | 28 | 8 |
| துங்கமத்தியம் ஆக இராசி | 6. | 3. | 17 |

[இந்த துங்க மத்தியம் கூடுதல் 18-இராசியாக வந்தபடியால் எப்பொழுதும் 12-இராசிக்கு மேற்பட்டு வருமாயின் அவைகளைப் பன்னிரண்டில் கழித்துவிடவேண்டியது.]

சந்திர மத்தியமான இராசி 8. 6. 36 நின்றும்.

துங்க மத்தியமான இராசி 6. 3. 17 நீக்க நின்றது.

---

இராசி 2. 3. 19 ருணம்.

---

புஜா

இப்புஜாவுக்கு இராசி ஒன்றுக்கு 8 வாக்கியமாகக் கூடியது 16 வாக்கியம், போக பாக்கி நிற்கும் பாகை 3, கலை 19 ஐயும் கலையாக்கக்கூடியது 199-க்கும் வாக்கிய பலனிலிருக்கும் இரண்டாவது கலத்திற்குக் கீழுள்ள மிச்சத்தாற் பெருக்கி 225-க்கு ஈயவரும் கலையை முதல் ஸ்தானத்துடனிருக்கும் கலைபுடன் கூட்ட வாக்கிய பலனையால் இப்பொழுது 16-வது வாக்கியத்திற்குக்கொடுக்கப்பட்டிருப்பது 261-9-க்கு மிச்சமான 199 ஐ 9ல் பெருக்கி 225க்குக் கொடுத்துக்கண்டது 8 ஆகையால் ஆக கூடிய கலை 269-க்குப் பாகை 4 கலை 29 ஆகிறது.

இதனை சந்திரமத்தியத்தில் ருணமாகையால் கழிக்கக் கிடைத்தது இராசி

| | R | ō | 1 | ō | 1 | R | ō | 1 |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 8 | 6 | 36 - | 4 | 29 - | 8 | 2 | 7 |

இதுதான் சந்திர சுத்தஸ்புடம். அதாவது ஜனனகாலத்தில் சந்திரன் 9-வது இராசியில் 2 பாகை 7 கலையிலிருந்திருக்கின்றார். அதைக்கொண்டு மூலநக்ஷத்திரம் உதயமாகி முதல் பாதத்தில் 1 பாகை 13 கலைபாக்கி நிற்கிறதென்றேற்படும்.

## செவ்வாய் சுத்தஸ்புடம் செய்ய.

---

நவக்கோள் கண்டமான 147130 ஐ 687ல் வகுத்து மிச்சத்தை 12, 30, 60ல் பெருக்கி வகுத்து வந்தது இராசி 1-28-41 (R ō 1) மறுபடிகண்டசேஷமான 1866-ல் வகுத்துவந்ததைக்கூட்ட 0-1-19

ஆக இராசி 2—0-00

நித்தியகதி 47 57½ விநாடிக்குக் கூடியது 0—0-25

துருவம் இராசி 11-13-34

ஆக செவ்வாய் மத்தி இராசி 1-13-59

குஜமத்தியமமான இராசி 1-13-59 நின்றும்
மந்தோச்சம் இராசி 3-28--0 நீக்க
மிகுதி 9 15 59 இது தனம்

கோடியாகையால் 3 இராசியிலிருந்து கழிக்க கிடைப்பது இராசி 2-14-1-க்கு வாக்கியம் காணவேண்டிய எண் இராசி இரண்டுக்கும் 16-ம் 14 பாகை 1 கலைக்கு வாக்கியம் ஒன்றுக்கு $3\frac{3}{4}$ பாகையாக 3-க்கு 11 பாகை 15 கலைபோக பாக்கி 2-46 அல்லது 106 கலைகள். இதன் பலன் 472- 42. 42-ல் 106ஐ பெருக்கி 225க்குகொ

ó 1

டுக்கக்கிடைத்ததிற்பாதி பாகை 4-6 இதனை குஜமத்தியத்தில் கூட்ட இராசி 1-18-5 இதற்கு அர்த்தமந்த மென்பர்.

இரண்டாவது சம்ஸ்காரம்:— அர்த்தமந்தமான 1-18-5-ல் சூரிய மத்தியத்தை அதாவது 9 இராசி 22-31 கலையைக் கழிக்க கிடைத்தது 3-25-34 ருணம். கோடி.

கற்கிஜா

வாக்கியம் காண கோடியாகையால் 3-ல் கழிக்க கிடைத்த இராசி 2-4-26-க்கு 17 வாக்கியம்போக 41 கலை மிச்சம் 17-க்கு கற்கிஜா 2322 30-க்கு கூடுதல் 2328-க்கு பாதி—19 பாகை 24 கலையை அர்த்தமந்தமான 1 - 18 - 5-ல் கழிக்கப்பெற்றது 0-28-41 கலை அர்த்த சீக்கிரம்—

மூன்றாவது சம்ஸ்காரம்:— மேலேவந்த அர்த்த சீக்கிரமான 0-28-41-ல் மந்தோச்சம் இராசி 3-28 போக மீதம் 9-0-41-க்கு தனம், கோடிக்கு 23 184 வாக்கியம் 778—2-க்கு 13 பாகையை

R ó 1 ó R ó 1

குஜமத்தியத்தில் கூட்ட 1 13 59 + 13 பாகை ஆக 1 26 59 இதனை பூர்ணமந்தமென்பர்.

4-வது சம்ஸ்காரம்:— பூர்ணமந்தத்தில் சூரியமத்தியத்தைக்

R ó 1 R ó 1 R ó 1

கழிக்க 1 26 59— 9 22 31 4 4 28-க்கு ருணம், கோடி,

R ó 1

கடகஜாவுக்கு கூடியது பலன் 2411 கலை அல்லது இராசி 1 10 11

இதனை பூர்ணமந்தத்தில் கழிக்கக்கிடைத்தது 0 16 48 கலை. இது தான் குஜசுத்தஸ்புடம்.

## புதஸ்புடம்.

—:(o):—

1. சூரியமத்தியத்தில் புதமத்தியத்தைக் கழித்து ருணதன மறிந்து கர்க்கிஜா மகரஜாகண்டு புஜாகோடிசெய்து வாக்கிய பலனைப் பாதிசெய்து மேல்வந்த சூரியமத்தியத்தில் கூட்டல் கழித்தல்செய்ய அர்த்த சீக்கிரமாம்.

2. மேலே வந்த அர்த்த சீக்கிரத்தில் மந்தோச்சம் வாங்கி ருணதனமறிந்து, புஜாகோடி செய்து வாக்கியங்கண்டு வந்த பலனை முழுவதையும் சூரியமத்தியத்தில் கூட்டல் கழித்தல் செய்ய பூர்ண மந்தமாம்.

3. மேல்வந்த பூர்ணமந்தத்தில் புதமத்தியத்தைக் கழித்து ருணதனமறிந்து புஜாகோடி செய்வதையும் கற்கிஜாமகரஜாகண்டு வந்தபலன் முழுவதையும் பூர்ணமந்தத்தில் கூட்டல் கழித்தல் செய்ய புதசுத்தஸ்புடமாகும்.

இதன்படி மேல்வந்த நவக்கோள்கண்டம் 147130 ஐ வைத்து

| | R | ° | ' |
|---|---|---|---|
| செய்த புதமத்தியஸ்புடம் இராசி | 5 | 11 | 44 |
| இதற்கு முதலாவது சம்ஸ்காரப்படி அர்த்த சீக்கிரம் | 9 | 12 | 23 |
| இரண்டாவது சம்ஸ்காரப்படி பூர்ணமந்தம் | 9 | 19 | 3 |
| மூன்றுவது சம்ஸ்காரத்தால் புதசுத்தஸ்புடம் | 8 | 28 | 25 |

(இன்னும் வரும்.)

சோமசுந்தரதேசிகன்.

இலக்கணவிளக்க பரம்பரை.

# புத்தகக் குறிப்பு.

**ஸ்ரீ மகாபாரத மொழிபெயர்ப்பு:**—ஸ்ரீ வேதவியாஸபகவான் அருளிய வடமொழி மகாபாரதம், கும்பகோணம், நேடிவ் ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீமாந்-இராமாநுஜாசாரியரவர்கள் அரிய முயற்சியால் மொழிபெயர்க்கப்பெற்று சஞ்சிகைரூபமாக வெளிவருதலை முன்னரும் குறிப்பிட்டிருக்கிறோம். இம்மொழிபெயர்ப்பில், ஆதிபருமம் சபாபருவம் முற்றுப்பெற, இப்போது சாந்திபருவந் தொடங்கப்பட்டிருக்கிறது. சபாபருவத்துக்குப்பின் சாந்திபர்வம் தொடங்கும்படி நேர்ந்த காரணத்தைப் பதிப்பாசிரியரே குறித்திருக்கின்றனர். இத்தகைய பெருமுயற்சி இனிது நிறைவேறுமாறு, தமிழ்நாட்டார் ஊக்கியுதவல்] அவர்கடமையாமென்று நாம் மறுபடியும் வற்புறுத்தல் மிகையாகாது. இப்பொழுது வெளிவரும் பகுதிகளெல்லாம், நூற்பெருமைக்கேற்றவண்ணம்;சிறப்பாக அச்சலங்காரமும் பெற்று விளங்குகின்றன.

**திருக்குறள் வசனம்:**—தெய்வப்புலமைத் திருவள்ளுவர் அருளிச்செய்த திருக்குறளில், அறத்துப்பால் பொருட்பால்கட்கு, மூலத்திற்கு நேரான பொழிப்புரையாக்கி, எளியநடையில் இவ்வசனம் அமைக்கப்பட்டது. இவ்வசனம், பண்டிதர்க்கு வேண்டாததாயினும், ஏனையோர்க்குத் திருக்குறட்கருத்துக்களை ஒருபடியாக விளக்கத்தக்கதேயாம். இஃதெழுதியவர், திருமுல்லைவாயில் ஸப்-போஸ்ட்மாஸ்டர் மகா-௱-௱-ஸ்ரீ பு. து. இரத்தினம்பிள்ளையவர்கள்

இதன் விலை ரூ. 1—0—0.

பத்திராசிரியர்.

உ

சிவமயம்.

# பெரியபுராண அரும்பத விளக்கம்.

[பழைய ஏட்டினின்று எடுக்கப்பட்டது.]

(முற்றொடர்ச்சி.)

---

(௩௪.) பிரமனுடைய கபாலத்தைத் தரித்த இடத்திருக்கை யாலணைத்த விளங்குகின்ற ஒளியையுடைய மூவிலைச் சூலமானது அழகிய திருத்தோளின் மிசையே பொலிய.

(௩௬.) மனைக்குள்ளாரோ - வீட்டினுள்ளாரோ.

(௩௮.) விட்டால் நீங்குவார்போலிருந்தாரென்று அஞ்சிவிரைந்து இல்லறக்கடனையுடைய.

(௩௯.) வம்பென - புதிதாக.

(௪0.) உத்தராபதி - வடதேசம்.

(௪௫.) விபூதியையணிந்த சாதனத்தவர்முன் வணங்கப்போதேனாயினும்.

(௪௮.) அன்புகூருந்தொண்டரே ஆறுமாசங்கழிந்தால் பசுவை வீழ்த்திட்டுண்பது, அதற்குரிய நாளும் இன்று.

(௪௯.) முன்னரே பசுகிரையையு முடையேன்.

(௫0.) உண்பதஞ்சுபிராயத்துள் உறுப்பின் மறுவிலதாயின்; இன்னும் புண்பட்டநோவில் வேலெறிந்தாற் போலும் புகல்வதொன்றுள தென்பார்.

(௫௪.) தாய்பிள்ளையைப் பிடிக்கமகிழ்ந்து பிதா அரிந்து சமைக்கப்பெறில், என்றார். (தொடரும்.)

ஜி. சதாசிவம் பிள்ளை.

---